விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஆடி 27 திங்கட்கிழமை (11.08.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 236

SATS-TECH ENGINEERS



NEW PACKAGES & RENEWAL

CALL :- 222 5908/222 8812

## பாதுகாப்பு உத்தரவாதத்தை அரசாங்கம் வழங்க வேண்டும்

### மன்னார் ஆயர் தெரிவிப்பு

(மன்னார்)

மன்னார் மடு மாதா ஆலய வருடாந்த உற்சவத்தை நடாத்துவதற்கு முன்னர் அரசாங்கத்திடமிருந்து பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும் எனவும் விடுதலைப்புலிகளின் ஒத்துழைப்பைத் தன்னால் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் அடிகளார் தெரிவித்துள்ளார்.

சண்டே ஒப்சேவர் பத்திரிகைக்கு வழங்கியுள்ள விசேட செவ்வியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். விடுதலைப்புலிகள் வாய் மூலமாக உறுதி மொழி வழங்கினாலும் அரசாங்கத்திடமிருந்து தாம் எழுத்து மூல உறுதி மொழியை எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் மடு மாதா ஆலயத்திற்கு விஜயம் மேற் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கட்சி நொண்டிக் குதிரை இதனால் அரசுடன் இணைந்தோம்

### அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி தற்போதைய நிலையில் நொண்டிக் குதிரையாகவுள்ளது. அக் குதிரையில் ஓட முடியாது. தற்போது ஓடும் குதிரையாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் திகழ்கின்றது. இதனால்தான் நாம் அரசுடன் இணைந்துள்ளோம் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் செயலாளரும் அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்.

யானைக்கு மேல் சேவல் போகலாம். கதிரை மற்றும் வெற்றிலைக்கு மேலும் சேவல் போகலாம். ஆனால் சேவலுக்கு மேல் எதுவும் பயணிக்க முடியாது என்றும் அவர் கூறினார்.

இறக்குவானையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே (12 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் மக்கள் மீதான அடக்கு முறையே இனப்பிரச்சினைக்கான மூல காரணி

### அமைச்சர் ராஜித சேனாரத்ன சுட்டிக்காட்டு

(கொழும்பு)

சிங்களத் தீவிரவாதப் போக்குடையவர்களின் தமிழ் மக்கள் மீதான அடக்கு முறைப் போக்கும் பரிவு மனப்பான்மை, புரிந்துணர்வு, பகிர்ந்தளிக்கும் ஆற்றல் என்பவற்றிலுள்ள குறைபாடுகளுமே இன்று நாட்டின் இனப்பிரச்சினை இவ்வளவு தூரம் வளர்ச்சியடைவதற்கு முக்கிய காரணம் என பொறியியல் மற்றும் கட்டுமான அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## தப்பியோடிய படையினரை கைது செய்ய அரசு தீர்மானம்

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களில் 12 ஆயிரம் பேரை உடனடியாகக் கைது செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வன்னியில் மோதல்கள் தீவிரமடைந்துள்ள நிலையில் படைத் தரப்பு பெரும் ஆள் பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்ளது. எனவே படைகளிலிருந்து அண்மையில் தப்பியோடியவர்களில் 12 ஆயிரம் படையினருக்கு பொது மன்னிப்பு வழங்காது அவர்களைக் கைது செய்து களமுனைக்குக் கொண்டு செல்ல அரசு திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பில் இராணுவப் பேச்சாளர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளதாவது,

எதிர்வரும் காலத்தில் தப்பியோடிய படையினருக்குப் பொதுமன்னிப்புக்கள் வழங்கப் படமாட்டாது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் நேற்று இருவர் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பிலும் திருகோணமலையிலும் நேற்று இடம்பெற்ற இருவேறு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் இருவர் கொல்லப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்புக் காத்தான்குடிப் பிரதேசத்தில் படையினரது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஒருவர் பலியாகியுள்ளார். குறித்த நபர் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோதே படையினர் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியுள்ளனர்.

இவர் சோதனைச் (12 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் இடம்பெற்ற மோதலில் 28 விடுதலைப்புலிகள் உயிரிழப்பு

### பாதுகாப்பு அமைச்சுத் தகவல்

(கொழும்பு)

வன்னிக் களமுனைகளிலும் யாழ்ப்பாணத்தில் கிளாலிக் களமுனைகளிலும் சனியன்று இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் இடம்பெற்ற மோதல்களில் குறைந்தது 28 விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டிருப்பதாகத் தேசிய பாதுகாப்புக்கான ஊடகத் தகவல் மையம் தெரிவித்திருக்கின்றது.

வவுனியா, பாலமோட்டை முன்னரங்கப் பகுதிகளிலும் வெலிஓயாப் பகுதியிலும் இராணுவத்தினர், விடுதலைப்புலிகள் மீது நேற்று முன்தினம் நடத்திய தாக்குதலிகளில் 12 விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டுள்ளதாக இராணுவம் விபரம் வெளியிட்டுள்ளது.

பாலமோட்டைப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி. ஆதரவாளர்கள் தாக்கப்பட்டனர்

இரத்தினபுரி நிவித்திகலப் பகுதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த ஜே.வி.பி. ஆதரவாளர்கள் மீது நேற்றுக் காலை தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தேர்தல் வன்முறைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜே.வி.பி. இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது.

ஆர்ப்பாட்டம் நடந்து கொண்டிருந்தபோது அங்கு வருகை தந்த மற்றுமொரு கும்பல் கல், கம்பு போன்றவற்றால் தாக்குதல் நடத்தினர் எனத் தெரிவிக்கப்பட்டது. இந்தத் தாக்குதலில் பொலிஸ் அதிகாரி ஒருவர் காயமடைந்ததோடு பொலிஸார் தாக்குதலைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளனர். (ச–5)

## சீனாவில் குண்டுவெடிப்பு 5 பேர் உடல் சிதறிப் பலி

(பீஜிங்)

சீனாவின் பீஜிங் நகரில் கடந்த 8 ஆம் திகதி ஒலிம்பிக் போட்டிகள் தொடங்கின. தீவிரவாதிகள் ஒலிம்பிக் போட்டியைச் சீர்குலைக்கலாம் என்ற பீதி எழுந்ததால் நாடு முழுவதும் வரலாறு காணாத பலத்த பாதுகாப்புப் போடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் சிங்சியாங் பகுதியில் உள்ள குகா நகரில் திடீர் என்று குண்டு வெடித்தது. மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதியில் நடத்த இந்தக் குண்டு வெடிப்பில் 5 பேர் பலியானார்கள். அடுத்தடுத்துப் பல தடவை தொடர்ச்சியாகக் குண்டுகள் வெடித்தன.

குண்டு வெடிப்பைத் தொடர்ந்து அந்தப் பகுதிக்குப் பொலிஸாரும் இராணுவத்தினரும் விரைந்து சென்றனர். அப்போது குண்டு வைத்த தீவிரவாதிகளுக்கும் பொலிஸாருக்கும் இடையே (12 ஆம் பக்கம் பார்க்க)

## 5 மாகாண சபைகளை கலைக்க அரசாங்கம் தீவிர நடவடிக்கை!

(கொழும்பு)

அரசாங்கம் எதிர்வரும் வாரங்களில் 5 மாகாண சபைகளைக் கலைத்து அவற்றுக்கான தேர்தல்களுக்கு அழைப்பு விடுக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன்படி மேல் மாகாண சபை, மத்திய மாகாண சபை, வடமேல் மாகாண சபை, ஊவா மாகாண சபை மற்றும் தென் மாகாண சபை என்பவற்றுக்கே தேர்தல்கள் நடத்தப்படவுள்ளதாக அரசியல் தரப்புக்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் 23 ஆம் திகதியன்று சப்ரகமுவ மாகாண சபை மற்றும் வட மத்திய மாகாண சபைகளில் தேர்தல்கள் நடத்தப்பட்ட பின்னர் குறித்த மாகாண சபைகளைக் கலைக்கும் அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நியதியின்படி இந்த 5 மாகாண சபைகளுக்கும் தேர்தல் 2009 ஆம் ஆண்டில் நடத்தப் பட வேண்டும். வட (12 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு வலி.கிழக்கு பிரதேச சபையினால் கடந்த மாதம் 28ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்ட இரத்ததான நிகழ்வில் புத்தூர் கலைமதி சனசமூக நிலையத்தினர் இரத்ததானம் செய்வதைப் படத்தில் காணலாம்.

# மத்தியஸ்த தினவிழா

யாழ். மத்தியஸ்த சபையின் மத்தியஸ்த தினவிழா எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு வைத்தீஸ்வராக் கல்லூரியில் யாழ். மத்தியஸ்த சபை தவிசாளர் வி.ஶ்ரீசக்திவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ், யாழ்.மேல் நீதி மன்ற நீதிபதி இ.த.விக்னராஜா ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட நீதிபதி இ.வசந்தசேனன், யாழ்.பிரதேச செயலர் எம்.மரியதாசன் ஜேசூ,மத்தியஸ்த சபையின் பயிற்றுநர் க.கணேசராசா, மத்தியஸ்த சபை அமைப்பாளர் மா.ஜனார்த்தனன், வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் நா.வன்னியசிங்கம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-6)


## உடன் தேவை

பெண்களுக்கான உள்ளாடை (BRA) தைப்பதற்கு அனுபவமுள்ள பெண் பிள்ளைகள் உடன் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

SUN STAR GARMENTS
56/14, ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம்.
T.P:-077 4415300

(C-1389)

## மணமகள் தேவை

இந்து வேளாளர், வெளிநாட்டில் வசிப்பவர், பிறந்த ஆண்டு 1975 நட்சத்திரம் ரேவதி-4, 8இல் செவ்வாய்,கிரகபாவம் 31, M.B.B.S டாக்டருக்கு, B.Sc க்கு மேல் படித்த பட்டதாரி கார்த்திகை -02, ரோகிணி, புனர்பூசம், அத்தம், உத்தரம்-02, திருவோணம், உத்திரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்த பெண் தேவை.

*தொடர்புக்கு:-* மேரி திருமண சேவை
46,புதுவீதி, கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம். T.P:-0779116346

(1525)

உங்கள் பிள்ளை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றுகிறாரா?

கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்.

இதோ! அரிய சந்தர்ப்பம் உங்கள் கணக்கு மீதி இரட்டிப்பு



அப்படியானால், ஒவ்வொரு பாடசாலையிலும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சிறப்பாக தேர்ச்சிபெறும் மாணவர்களுக்கு வழங்கப்படும் பணப்பரிசில்கள் உங்கள் குழந்தைக்கும்.

முதலாம் இடம் ரூபா 10,000/-
இரண்டாம் இடம் ரூபா 7,500/-
மூன்றாம் இடம் ரூபா 5,000/-

அத்தோடு, உங்கள் குழந்தை மாவட்டத்தில் முதல் இடத்தில் சித்தியெய்தால் அவனது / அவளது அருணலு கணக்கு மீதி இரண்டு மடங்காக அதிகரிக்கப்படும். (அதிகூடிய தொகை ரூபா. 50,000/-க்கு உட்பட்டதாகும்).

- இதற்கு நீங்கள் செய்ய வேண்டியது, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை நடைபெறும் திகதியன்று, உங்கள் குழந்தையின் பெயரில் உள்ள அருணலு சிறுவர் கணக்கில் குறைந்தது ரூபா 5,000/- கணக்கு மீதியை பேணுவது மட்டுமே.
- இதுவரையில் உங்கள் பிள்ளையின் பெயரில் அருணலு கணக்கு ஒன்று ஆரம்பித்து இருக்காவிடில் தாமதிக்காமல் அருகே உள்ள கொமர்ஷல் வங்கிக்கு விரையுங்கள்.
- அர்ப்பணிப்புடன் கற்று அதிகம் வெல்லுங்கள். அருணலு பாதையில் உங்கள் குழந்தையையும் வழிநடத்துங்கள்.

* உரிய விண்ணப்பப் படிவத்தை எமது இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

அருணலு
சிறுவர் சேமிப்புக் கணக்கு

# இன்று ஒரு தகவல்

## பரதன்...

"என்னை யாரும் சரியாக புரிந்துகொள்கிறார்களில்லை சார்!" என்றார் ஒருவர். "இராமாயனத்தில் வரும் பரதனையே யாரும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லையே!" என்றேன்.

"என்ன சார் திடீரென்று இராமாயணத்துக்குப் போய் விட்டீர்கள்!" என்றார். இதோ பாருங்கள்! என்று எனக்கு நேயர் ஒருவர் எழுதிய கடிதத்தை அவரிடம் காட்டினேன். அதில் இதைப்பற்றி அவர் எழுதியிருந்தார். நல்லதையே நினைத்து நல்லதையே செய்தால் கூட சந்தர்ப்ப சூழ்நிலைகள் கெட்ட பெயரை வாங்கிக் கொடுத்துவிடும். இராமாயாணத்திலேயே ஒரு சிறந்த கதாபாத்திரம்-பரதன். அப்படிப்பட்ட பரதனை அவனுக்கு நெருக்கமாக இருந்தவர்களே சரியாகப் புரிந்து கொள்ளவில்லை.

ஏன் பெற்றதாயே சரியாகப் புரிந்துகொள்ளவில்லை! புரிந்து கொண்டிருந்தால் என் மகனுக்கே பட்டம் சூட்ட வேண்டும் என்று தன் கணவனிடம் கேட்டிருப்பாரா?

இது தன்பிள்ளைக்கு பிடிக்காது என்பது அந்தத் தாயாருக்குத் தெரியவில்லை! எல்லாவற்றையும் கேள்விப்பட்டு அவன் வந்து திட்டும் போதுதான் அவன் எப்படிப் பட்டவன் என்பது அவருக்குப் புரிகிறது! சரி... அப்பாவாவது அவனைச் சரியாகப் புரிந்துகொண்டாரா?

அதுவும் இல்லை!

அண்ணன் இருக்கும் போது தம்பி அரசாள விரும்புவானா என்ற விஷயம் அவருக்குத் தெரியவில் லையே! தெரிந்திருந்தால் வரம் கேட்ட மனைவியிடம் "நீ எனக்கு மனைவியில்லை" என்று சொன்னதோடு நிறுத்தாமல் "உன்மகன் பரதன் எனக்கு மகனல்ல!" என்று வேறு சொல்லிவிட்டாரே!

சரி... அமைச்சர்களாவது அவனைச் சரியாகப் புரிந்துகொண்டார்களா? அதுவுமில்லை! தந்தையின் மறைவு அவனுக்குத் தெரிவிக்கப்படவில்லை! மாமன் வீட்டிலிருந்து தற்செயலாக ஊருக்குத் திரும்பி வரும் போது அவனிடம் என்ன... முடிசூட்டுவிழா ஏற்பாட்டைச் செய்யலாமா? என்று கேட்கிறார்கள்.

பரதனை குகன் கூட சரியாப் புரிந்துகொள்ளவில்லை. இவன் தாயை வெறுத்து கோபமாகப் பேசிவிட்டு மரவுரி தரித்து அண்ணனைப் பார்ப்பதற்காக காட்டுக்கு வரும் போது அவனைத் தவறாகப் புரிந்துகொண்டு அவனோடு சண்டையிடத் தயாரானான். இராமன், இலட்சுமணனாவது பரதனைச் சரியாகப் புரிந்துகொண்டார்களா?

பரதனைக்கண்ட இலட்சுமணன் கோபப்படுகிறான். இராமர் அவனைச் சாந்தப்படுத்தி பரதனைக் கூப்பிட்டு, "தம்பி... அரசாட்சி உனக்குச் சுகம் தருகிறதா?" என்று கேட்கிறார். அவனைப் புரிந்துகொண்டிருந்தால் அப்படிக் கேட்டிருப்பாரா? இப்படிப் பலராலும் புரிந்துகொள்ள முடியாமல் போன பரிதாபத்துக்குரிய குணச்சித்திரம் தான் பரதன்.

ஆனால் பரதனைப் புரிந்துகொண்ட சிலரும் இராமாயாணத்தில் உண்டு. பரதனைக் கண்ட குகன் யுத்தத்துக்குத் தயாராகும் போது, வேடர்களையெல்லாம் போருக்கு வருமாறு அழைக்கிறான். அவர்களெல்லாம் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு மௌனமாக இருக்கிறார் கள். குகனுக்கு கோபம் வந்தது. "ஏன் இப்படி நிற்கிறீர்கள்?" என்று கேட்கிறான். அதற்கு அவர்கள், "தலைவா! பரதனைப் பார்த்தால் சண்டைக்கு வருபவன் மாதிரித் தெரியவில்லையே! இவனும் இராமன் மாதிரி மரவுரி தரித்து தவக்கோலத்தில் அல்லவா வருகிறான்... இவன் எப்படி இராமனுக்கு எதிரியாக இருக்க முடியும்?" என்கிறார்கள்.

விஷயம் தெரிந்தவர்களாலேயே சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. அந்தப் பாமர மனிதர்களான வேடர்கள் ஒரு பார்வையிலேயே புரிந்துகொண்டார்கள் பார்த்தீர்களா!

என்று என்னிடத்தில் வந்து பேசிக்கொண்டிருந்தவரிடம் சொன்னேன். அவர் "சார்... இப்ப நீங்கதான் என்னை சரியாகப் புரிந்து கொள்ளவில்லை!" என்றார். "என்ன சொல்றீங்க? என்றேன்."

இவ்வளவு விபரமும் உங் களுக்கு எழுதி அனுப்பிய நேயரே நான்தான் சார்... என்னிடமே கதை அளக்கிறீர்களே! என்கிறார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# முல்லைத்தீவு வைத்தியசாலைப் பிரதேசத்தை மோதலற்ற வலயமாக அறிவிக்க வேண்டும்

## அரசிடம் வைத்தியசாலைப் பணிப்பாளர் கோரிக்கை

முல்லைத்தீவு வைத்தியசாலையிலிருந்து 300 மீற்றர் சுற்றுவட்ட பிரதேசத்தை மோதலற்ற வலய மாக பேணுமாறு இராணுவத்தை அரசாங்கம் அறிவுறுத்த வேண்டும் என தாம்கோருவதாக முல்லைத்தீவு வைத்தியசாலை மருத்துவ அத்தியட்சகர் வி.சண்முகராஜா கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக சகல தரப்பின் ரிடமிருந்தும் மீள் உத்தரவாதத்தை நான் எதிர் பார்க்கிறேன். வைத்தியசாலை பாதுகாப்பாக இயங்கு வதற்கு அரசாங்கம் ஒத்துழைக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு வைத்தியசாலையை அண்டிய பகுதியில் இடம்பெற்ற ஷெல் தாக்குதல்களைத் தொடர்ந்தே இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மேற்படி தாக்குதலில் மாவட்ட செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார் , மருத்துவ அத்தியட்சகர் வி.சண்முகராஜாவின் மனைவி, மகன் ஆகியோரும் சிறு காயங்களுக்குள்ளாகியமை குறிப்பிடத்தக்கது.

இத்தாக்குதல் குறித்து மருத்துவ அத்தியட்சகர் சண்முகராஜா தகவல் தெரிவிக்கையில் இத்தாக்கு தலால் ஒரு குழந்தை பலியானது, 18பேர் காயமடைந்தனர். கர்ப்பிணியொருவரும் காயமடைந்தார். முதியவர்கள் மூவருக்கு முறிவுகள் ஏற்பட்டன.

அவர்களில் ஒருவரின் கை அகற்றப்பட்ட நேர்ந்தது. காயமடைந்த வர்களில்குழந்தையொன்றும் அடங்கும். காயமடைந்த கர்ப்பிணியின் வயிற்றுப்பகுதி மயிரிழையில் காயங்களிலிருந்து தப்பியது. இத் தாக்குதல்களிலிருந்து பலர் தப்பியமை அதிசயமானது. 6 நோயாளிகள் இவ் வைத்தியசாலையிலிருந்து இடம் மாற்றப் பட்டனர் என்றார். தாக்குதல் இடம் பெற்றவேளையில் வைத்திய சாலையில் சுமார் 100 நோயாளிகள் தங்கியிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட செயலாளர் திருமதி இமெல்டா தகவல் தெரிவிக்கையில் 25 ஷெல்கள் வைத்தியசாலையிலிருந்து 300 மீற்றர் சுற்றுப்பரப்புக் குள் விழுந்ததாக தெரிவித்துள்ளார். குறைந்த பட்சம் 6 ஷெல்கள் வீடுகளுக்குள் வீழ்ந்து வெடித்தன.

குறைந்த பட்சம் 2 நிமிடத்திற்கொருதடவை ஷெல்கள் விழுந்தன. இதேவேளை இடம்பெயர்ந்த மக்கள் இலக்கு வைக்கப்படாதிருப் பதையும் இராணுவ இலக்குகளுக்கு அருகில் தங்க வைக்கப்படாதிருப்பதையும் உறுதிப்படுத்துமாறு தாம் வலியுறுத்துவதாக அகதிகளுக்கான ஐ.நா.உயர்ஸ்தானிகரலாயம் தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் தற்போதைய நடவடிக்கைகளையடுத்து பாதுகாப்பு தேடி இடம் பெயரும் மக்களின் சுதந்திரமான நட மாட்டத்திற்கு அனுமதிக்குமா றும் கோருகிறோம் என அகதிகளுக் கான ஐ.நா.உயர் ஸ்தானி கரலயத்தின் பேச்சாளர் றொன்றெட் மொன்ட் தெரிவித்துள்ளார். (அ-6)

# இந்தோனேசிய உப ஜனாதிபதியுடன் இனப்பிரச்சினை குறித்துப் பேச்சு

இலங்கையில்இடம்பெற்று வரும் இனப்பிரச்சனை குறித்துஇந்தோனேசியஉப ஜனாதிபதியுடன் மனிதஉரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இந்தோனேசியாவின் ஆச்சே மாநிலத்தில் நிலவிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுபெற்றுக் கொடுப்பதற்காக அந்நாட்டு அரசாங்கம் பின்பற்றிய வழிமுறைகள் குறித்து இந்தச் சந்திப்பின் போது விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது. தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுக் கொடுக்கும் போது மனித உரிமைகள்எவ்வாறு பேணப்படவேண்டும் என்பது குறித்து இந்தோனேசிய உப ஜனாதிபதி பல்வேறு காத்திரமான கருத்துக்களை முன்வைத்தாக மனித உரிமைகள் அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-5)

# போலிக் கடவுச்சீட்டில் கனடா செல்ல முயன்ற இலங்கையர் சென்னையில் கைது

(சென்னை)

போலியான கடவுச்சீட்டு மூலம் கனடாவுக்குச் செல்ல முயன்ற இலங்கைப் பிரஜை ஒருவர் தமிழகத்தின் சென்னை விமான நிலையக் குடிவரவு அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை விமான நிலையக் குடிவரவு அதிகாரிகளை மேற்கோள் காட்டி இந்திய ஊடகங்கள் இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளன. இலங்கை பிரஜையான இவர் கொழும்பிலிருந்து திருச்சி சென்று பின்னர் சென்னையிலிருந்து கனடாவுக்குச் செல்ல முயற்சித்துள்ளார்.

இவருடைய கடவுச்சீட்டை சுங்கத் துறை அதிகாரிகள் சந்தேகத்தின் பேரில் சோதனை செய்த போது அது போலியானதெனக் கண்டு பிடிக்கப் பட்டதை அடுத்தே இவர் கைது செய்யப்பட்டிருப்பதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன. (அ-6)

## இராசி பலன்

11.08.2008
(ஆடி 27, திங்கட்கழமை)
கேட்டை முழுவதும்
தசமி முன்னிரவு 8.39
இராகுகாலம்-7.34-9.04 மணிவரை
சுபநேரம்-12.04-1.34 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | வாகன பயம், அஜீரணக் கோளாறு, முயற்சி தாமதம் போசனசுகம். |
| இடபம் | நல்ல வரவேற்பு, எடுத்த காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை. |
| மிதுனம் | அதிகபிரயாசை, உடல்நலம், பணவருவாய், நண்பர்கள் உதவி. |
| கடகம் | தொழில் சிந்தை, குடும்பக் கவலை, கௌரவக்குறைவு. |
| சிங்கம் | தாய்வழி உறவுத, தொழில் ஆர்வம், சுபசெலவு, முயற்சி தாமதம். |
| கன்னி | பாராட்டு, காரிய அனுகூலம், உறவினர் உதவி, போசன நன்மை. |
| துலாம் | கடினவார்த்தை, காரிய தாம தம், மரியாதைக்குறைவு. |
| விருச்சிகம் | தெய்வசிந்தை, நல்லமுயற்சி, விருந்துபசாரம்,நண்பர்கள்சந்திப்பு |
| தனுசு | திடீர் பயணம், காரிய தாமதம், சுபசெலவு, சயனசுகக்குறைவு. |
| மகரம் | பெருமையடைதல், தொழில் நன்மை, குடும்பசுகம், சுபநிகழ்வு. |
| கும்பம் | நல்ல முயற்சி, தூரதேசச் செய்தி, போசனநன்மை, ஆரோக்கியம். |
| மீனம் | கட்டுப்பாடு, புதிய முயற்சி, பிரயாணம், எதிர்பாராத செலவு. |

வளவன்

# சுதேச மருத்துவச் செயலமர்வில் பங்குபற்றுவதற்கு வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபையின் ஏற்பாட்டில் சுதேச மருத்துவத்தினை அபிவிருத்தி செய்யும் முகமாக எதிர்வரும் 25ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதிவரையான காலப்பகுதியில் யாழ்.மாவட்டத்தில் "சுதேச மருத் துவ அபிவிருத்தி" எனும் தலைப்பிலான செயலமர்வு நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது. இச்செயலமர்வில் ஒவ்வொரு அமர்விலும் மேலதிகமாக 5 பேர் பங்குபற்ற இடமளிக்கப்படவுள்ளது எனவே இதில் பங்கு பற்ற விரும்புவர்கள் பெயர், முகவரி, பங்குபற்றும் திகதி, விரும்பும் அமர்வு என்பவற்றை யாழ்.சுகாதார சேவைகள் பணிமனையில் உடனடியாக பதிவு செய்யுமாறும் இதில் இணைத்துக் கொள்ளப்படுபவர்களை வடமாகாண சபையே தெரிவு செய்யும் என்றும் யாழ்.சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இதேவேளை எதிர்வரும் ஒக்ரோபர் மாதஅளவில் கொழும்பில் கண்காட்சி ஒன்று நடைபெறவுள்ளதால், அதில் பங்கு பற்ற விரும்பும் சுதேச மருத்துவர்கள் (சித்த ஆயுள்வேத வைத்தியர் மற்றும் பரம்பரை வைத்தியர்) நூல்கள் ஏதாவது வெளியிட்டு இருப்பின் அவற்றை கண்காட்சிக்கு வைப்பதற்கு வடமாகாண சுதேச மருத்துவ திணைக்களம் எண்ணியுள்ளது. எனவே, அவ்வாறு புத்தகங்கள் ஏதாவது வெளியிட்டு இருப்பின் அவர்கள் உடனடியாக புத்தகத்தின் பெயர், புத்தகத்தின் பெறுமதி, எழுதியவர், புத்தகம் வெளியிடப்பட்ட ஆண்டு போன்ற விபரங்களை யாழ்.சுகாதார சேவைகள் பணிமனைக்கு அறிவிக்குமாறும் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது. (சு)



யாழ்.இலக்கிய வட்ட நாவேந்தன் சிறுகதை விருது பெற்ற தி.ஞானசேகரனை, கம்பவாரிதி ஜெயராஜ் பொன்னாடை போர்த்தி வாழ்த்துவதைப் படத்தில் காணலாம்.

## கும்பாபிஷேகம்

சுழிபுரம் வடகிழக்கு சுயம்பு நாகேஸ்வரி சமேத சுயம்பு நாதப்பெருமானுக்கு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 4 ஆம் திகதி கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

எண்ணெய்க்காப்பு 2ஆம் திகதி 12 மணி முதல் 3ஆம் திகதி 12 மணிவரையும் நடைபெறும்.

இச் சிவாலயம் 1995 ஆம் ஆண்டும் அதற்கு முன்பாகவும் நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக பக்தர்கள் வழிபாடு செய்யமுடியாதவாறு பலத்த சேதத்திற்கு உள்ளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ)

## 'தண்டமிழ் தண்டலை' நூல் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் ஏற்பாட்டில் பாஷையூர் புலவர் அமரர் ஆ.தே.செகராஜசிங்கத்தின் 'தண்டமிழ் தண்டலை' நூல் அறிமுகவிழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் யாழ்.பிரதேச செயலரும் யாழ்.பிரதேச கலாசாரப் பேரவைத் தலைவருமான மரியதாஸன் ஜெகூ தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் வரவேற்புரையை கலை மேம்பாட்டுச் செயலாளர் கி.மா.நெல்சன், நயப்புரையை கரித்தாஸ் கியூடெக் நிறுவன இயக்குநர் கி.யே.ஜெயக்குமார், அறிமுகவுரையை செயற்குழு உறுப்பினர் செ.யோசப்பாலா, மதிப்புரையை ஈ.குமரன் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

முதல் பிரதியை பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய பங்குத்தந்தை அ.ஜாவிஸ் அடிகள் பெற்றுக்கொள்வார். (அ-6)

## நிர்வாக உத்தியோகத்தர் நியமனம்

(காரைநகர்)

காரைநகர் உதவி அரச அதிபர் பணிமனைக்கு புதிய நிர்வாக உத்தியோகத்தராக ஆறுமுகம் சத்தியமூர்த்தி யாழ்.மாவட்டச் செயலகத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அரச முகாமைத்துவ உதவியாளர்களிற்கு நடாத்தப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட அதி சிறப்பு தரத்திற்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த இவர் அரச நிர்வாக அபிவிருத்தி நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட சேவை முன் பயிற்சியினை நிறைவுசெய்து கடந்த வாரம் தமது கடமையைப் பொறுப்பேற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-246)

## யாழ்.செய்திகள்

## தொண்டர் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கு அவசர கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க ஏற்பாடுகள் நடைபெறுவதனால் அது சம்பந்தமான கலந்துரையாடலில் சகல தொண்டர் ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு தொண்டர் ஆசிரியர் சங்கம் கேட்டுக் கொள்கின்றது. (அ)

## நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் சிறப்புச்சொற்பொழிவும், கூட்டுப்பிரார்த்தனையும்

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் நடாத்தப்படும் சிறப்புச் சொற்பொழிவு மற்றும் கூட்டுப் பிரார்த்தனை நிகழ்வுகளில் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிமுதல் 6 மணிவரை 'சூரியனையே வென்ற பத்தினி' எனும் விடயம் பற்றி சிவ உமாசுதனின் சிறப்புச் சொற்பொழிவும், நீர்வேலி ஸ்ரீ கணேசா அறநெறிப் பாடசாலை, நீர்வேலி காமாட்சி அம்பாள் அறநெறிப் பாடசாலை மற்றும் நீர்வேலி சிறிமுருகன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கூட்டுப் பிரார்த்தனையும் இடம்பெறும். (அ)



*மக்கள் வங்கி சுன்னாகம் கிளையின் சிசு உதான அலகு திறப்பு விழா ஏழாலை மகா வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் செ.ஞானச்சந்திரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.*

*இந்நிகழ்வில் மக்கள் வங்கி உதவிப் பிராந்திய முகாமையாளர் சு.ஹென்றி வங்கி அலகைத் திறந்து வைப்பதையும், அருகில் பாடசாலை அதிபர் நிற்பதையும் படத்தில் காணலாம்.*

## தேசிய அணியில் இடம்பிடிக்க தொடர் போட்டிகள் நடாத்த வேண்டும்

### உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் உரை

(யாழ்ப்பாணம்)

எமது வீராங்கனைகள் தேசிய அணியில் இடம்பிடிக்க வேண்டுமெனில் மாவட்ட மட்டத்தில் தொடர்ச்சியாக கூடைப்பந்தாட்ட போட்டிகளை நடத்தவேண்டும் என கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் இறுதிப் போட்டியில் பங்குபற்றிய உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் ஷிரானி மில்ஸ் உரையாற்றும் போது தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில், யாழ். மாவட்டப் பாடசாலைகளில் முதல் தடவையாக 17 வயதுக்குட்பட்ட கூடைப்பந்தாட்ட அணிகளை உருவாக்கும் நோக்கில் இலங்கை பாடசாலை கூடைப்பந்தாட்ட சம்மேளனத்தின் அறிவுறுத்தலுக்கு இணங்க உடுவில் மகளிர் கல்லூரியின் அதிபர் தலைமையில் இடம்பெற்ற கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் 5 அணிகள் பங்குபற்றின. இதில் திருக்குடும்ப கன்னியர்மடமும் உடுவில் மகளிர் கல்லூரியும் இறுதிப் போட்டிக்கு தெரிவாகி திருக்குடும்பகன்னியர்மடம் முதலாம் இடத்தை தனதாக்கியது. இச் சுற்றுப் போட்டியானது குறுகிய காலத்தில் நடத்தப்பட்ட போதும் வீராங்கனைகள் சிறப்பாகவே தம்மை தயார்ப்படுத்திக் கொண்டுள்ளனர். இதன்மூலம் தேசிய அணியில் நாம் இடம்பிடிப்பதை துரிதப்படுத்திக் கொள்ளலாம். கூடைப்பந்தாட்ட அணிகள் யாழ்ப்பாணத்தில் எல்லாப் பாடசாலைகளிலும் உருவாக்கப்படவேண்டும்.அப்போது தான் சிறந்த அணிகள் மாவட்ட மட்டத்தில் உருவாகும். நாமும் தேசிய அணியில் இடம் பிடித்து எமது பிரதிநிதித்துவத்தை காட்ட முடியும். எனவேதான் உங்கள் நலன் கருதி இப்போட்டியை பல சிரமத்தின் மத்தியில் நடத்தியது மட்டுமல்லாமல் போக்குவரத்துக் கஷ்டத்தின் மத்தியிலும் விமானத்தின் மூலம் சான்றிதழ் எடுக்கப்பட்டு உடனடியாகவே உங்களுக்கு வழங்கப்படுகின்றது.

எனவே இப்போட்டியில் முதல் 3 இடங்களைப் பெற்ற அணிகள் தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றவுள்ளன என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேன். (ஓ)

## யாழ்ப்பாணக் கல்லூரியில் மாபெரும் ஹொக்கி சுற்றுப்போட்டி

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் கல்லூரியின் விளையாட்டுத் துறை வளர்ச்சிக்கு அரும்பணியாற்றிய மறைந்த ஆசிரியர் ஆனந்தரட்ணம் ஞாபகார்த்தமாக யாழ்.மாவட்டப் பாடசாலைகள். விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே மாபெரும் ஹொக்கி சுற்றுப் போட்டி ஒன்று நடாத்தப்படவுள்ளது.

இச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றும் கழகங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு விண்ணப்பப்படிவங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் கிடைக்கப் பெறாத பாடசாலைகள்,கழகங்கள் விண்ணப்பப் படிவங்களை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள பட்டப்படிப்புகள் கல்லூரியில் பெற்றுக் கொள்ளலாம் என்றும் விண்ணப்பங்களை எதிர்வரும் 20ஆம் திகதி புதன்கிழமைககு முன்னர் விண்ணப்பிக்குமாறும் யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் நோபல் விமலேந்திரன் தெரிவித்துள்ளார்.

சுற்றுப் போட்டிகள் இம்மாத இறுதிப் பகுதியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் என்றும் எனவே அனைத்து கழகங்களையும் பாடசாலைகளையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அதிபர் நோபல் விமலேந்திரன் கேட்டுள்ளார். (அ-27)

## உதைபந்தாட்ட நொக்கவுட் போட்டி

யாழ்.உதைபந்தாட்டத்தின் லீக் அனுசரணையுடன் யாழ். சென்றோக்ஸ் விளையாட்டுக்கழகம் நடாத்தும் 7பேர் கொண்ட நொக்கவுட் போட்டியில் இன்று திங்கட்கிழமை பி.ப 4 மணிக்கு A பிரிவில் றோயல் விளையாட்டுக் கழகம் (B) எதிர் பல்கலைக்கழகமும் பிற்பகல் 4.45 மணிக்கு D பிரிவில் யங்கென்றிசியன் விளையாட்டுக் கழகம் எதிர் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் போட்டியிடவுள்ளன.

நாளை செவ்வாய்கிழமை பி.ப 4.45 மணிக்கு A பிரிவில் பாடும் மீன் (A) எதிர் கொய்யாத் தோட்டம் ஐக்கிய விளையாட்டுக் ககழகமும் போட்டியிடவுள்ளன. (அ)

## தாச்சிச் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.இலங்கை வங்கியினதும், வர்த்தக வங்கியினதும் ஆதரவுடன் யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் நடாத்தும் 13 ஆவது மாபெரும் தாச்சி சுற்றுப்போட்டி தாவடி ஸ்ரீகாளி அம்மாள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழகம் எதிர் உடுவில் உதயசூரியன் விளையாட்டுக் கழகமும் நாளை செவ்வாய்க் கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு சாவக்காடு மகாத்மா விளையாட்டுக்கழகம் எதிர் மயிலிட்டி இளைஞர் ஒன்றியம் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (அ)

## வீட்டுத்தோட்ட செய்கைக்கு லீட்ஸ் நிறுவனம் உதவி

(ஊர்காவற்றுறை)

எழுவைதீவு முருகவேள் வித்தியாலய மாணவர்களின் பெற்றோர்களுக்கு (சுமார் 35பேருக்கு) லீட்ஸ் நிறுவனத்தினரும் பாடசாலை சமூகமும் இணைந்து வீட்டுத்தோட்ட செய்கையை ஊக்குவிக்கும் முகமாக வீட்டுத் தோட்ட செய்கைக்கான மூலப்பொருள் மற்றும் பூவாளி, விதை தானியங்கள், நாற்றுக்கள் வழங்கப்படவுள்ளன.

இவற்றின் மொத்தப் பெறுமதி இரண்டரை இலட்சம் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-14)

## தீவக கல்வி வலயத்தில் சர்வதேச எழுத்தறிவு தினம்

தீவக கல்வி வலயத்தில் சர்வதேச எழுத்தறிவு தினத்தை முன்னிட்டு முறைசாரா கல்விப் பிரிவினால் நடத்தப்பட்டுவரும் எழுத்தறிவு நிலையம் மற்றும் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயின்று வரும் பிள்ளைகளுக்கான போட்டியை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**கட்டுரைப்போட்டி**

◆ ***எழுத்தறிவு நிலையத்தில் கல்வி கற்போர் மட்டும்***

அ) 07 வயது தொடக்கம் 10வயது வரை
**தலைப்பு:-கல்வியால் அடையும் பயன்கள்**
நேரம்:- 40நிமிடம்
கட்டுரை 100சொற்களுக்கு குறையாமல் இருக்கவேண்டும்.

ஆ) 11வயது தொடக்கம் 14வயது வரை
**தலைப்பு:-கல்வி மனிதனுக்கு அவசியமா**
நேரம்:-1 மணித்தியாலம்
250 சொற்களுக்கு குறையாமல் இருத்தல்வேண்டும்.

◆ ***தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சிபெறுவோர் மட்டும்***

**தலைப்பு: 1.செய்யும் தொழிலே தெய்வம் (or)**
**2. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்**
நேரம்:-1 மணித்தியாலம்
400சொற்களுக்கு குறையாமல் இருத்தல்வேண்டும்.

இப் போட்டிக்கு விசேட கல்விக்கு உட்பட்டவர்களும் விண்ணப்பிக்கமுடியும். பாடசாலை, கோட்டம், வலய மட்டத்தில் நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை கற்றல் நிலைய அதிபர்கள் ஊடாக கற்றல் நிலைய போதனாசிரியர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன எனவும் பாடசாலை மட்டப் போட்டிகளை குறிப்பிட்ட தினத்திற்கு முன்பு நடத்தி முடிக்கும் படியும் போட்டியை குறிப்பிட்ட நிலையத்தில் நடத்தி 1 தொடக்கம் 3 இடங்களைப் பெற்றவர்களின் ஆக்கத்தின் மூலப்பிரதியும் அவர்களின் பெயர் குறிப்பிட்டு எதிர்வரும் 18ஆம் திகதிக்கு முன் வலயக்கல்விப் பணிமனையின் முறைசாராக் கல்விப் பிரிவுக்கு அனுப்பிவைக்குமாறு தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஜி.வி. இராதாகிருஷ்ணன் கேட்டுள்ளார். (அ-6)




மாலிசந்தி மைக்கேல் விளையாட்டுக் கழகத்தின் 15ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி ஆரம்ப விழாவில் பிரதம விருந்தினரான உதைபந்தாட்ட லீக் தலைவர் டி.எம்.வேதாபரணத்திற்கு விளையாட்டு வீரர்கள் அறிமுகம் செய்து வைக்கப்படுவதையும்,ஆரம்ப விழாவில் மோதிய விளையாட்டுக் கழகங்களின் வீரர்களுடன் விருந்தினர்களையும் காணலாம். (படங்கள்:-பரு.நிருபர்)

# நோத்முதல் கோபல்லவா வரை 64



### இலங்கையர் சங்கம் செய்த கிளர்ச்சி

யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் மரபுவழி தமிழும் வடமொழியுங் கற்று, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலே ஆங்கிலங் கற்று விற்பன்னராக விளங்கியதோடு ஆசிரியராயும் பிரசுர கர்த்தாவாகவும் விளங்கினர். அவர் தமது 26 ஆம் வயதிலே 1848 ஆம் ஆண்டிலே அச்சுக் கூடம் வாங்குவதற்காகச் சென்னைப் பட்டணம் சென்றார். அவருடைய முயற்சி யால் யாழ்ப்பாணத்திலே பெரியதொரு விழிப்புணர்ச்சி ஏற்படலாயிற்று. அதனால் கல்வி கற்பதில் எல்லோருக்கும் ஊக்கம் பிறக்கலாயிற்று. அதனால் நாட்டில் சைவப்பிரகாச வித்தியாசாலைகளும் சைவாபிவிருத்திச் சங்கங்களும் ஆரம்பிக்கப்படலாயின.

சட்ட நிரூபண சபையிலே அங்கத்துவம் வகித்த உத்தியோகப் பற்றற்றவர் சாதி, சமய, இன மொழி வேறுபாடு கருதாது இலங்கைக்கு நல்ல முறையில் ஓர் அரசியலமைப்பு அமைதல் வேண்டும் என்று கிளர்ச்சி செய்வாராயினர். கோல்புறூக் திருத்தம் நடைமுறைக்கு வந்த காலத்திலே தான் ஐரோப்பியர் பிரதிநிதிகள் சில பிரச்சினைகளைக் கிளப்பினார்கள். அவர்கள் ஆரம்பத்தில் தாம் உத்தியோக அங்கத்தவரின் வரிசைக்குப் பின் இருக்க விரும்பவில்லை. அன்றி இலங்கை வாசிகளோடு சமமாக இருக்கவும் அவர்கள் விரும்பவில்லை.

ஆனால் நாளடைவில் வேறு பெரிய பிரச்சினைகள் நாட்டை நலியச் செய்யவே இத்தகைய வகுப்பு பிரச்சினைகள் மறையத் தொடங்கின மறைந்துவிட்டன.

பின்னர் 1853 ஆம் ஆண்டில் உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதிகள் தெருக்கட்டும் மானியத்தைக் குறைத்துக் கொழும்புக்கும் கண்டிக்குமிடையில் புகையிரதப் பாதையை அமைப்பதற்கு மானியத்தை அதிகரிக்க ஏகோபித்த நல்லிணக்கத்தைத் தெரிவித்தனர்.

இந்த அபிப்பிராயம் நிலவத் தொடங்கிய பின் 1864 ஆம் ஆண்டளவில் அரசாங்கத்திடம் 100000 பொன் கையிருப்பாய் இருந்தது. இத் தொகையைக் கொண்டு என்ன செய்வது என்ற பிரச்சினை 1864 இல் எழுந்தது. புகைவண்டிப்பாதையா, தெருக்கட்டுதலா இலங்கையின் பொருளாதார சமூக முன்னேற்ற வளர்ச்சிக்கு இன்றியமையாதது என்பதே அப்பிரச்சினை.

#### மீள் பார்வை

இப்பிரச்சினை இலங்கையைப் பொறுத்த அளவில் தெருக்களுக்கும் புகைவண்டிக்கும் இடையில் ஊசலாடிக் கொண்டிருந்த போது, குடியேற்ற நாட்டு மந்திரியாரின் மூளை வேறு பக்கமாக வேலை செய்யத் தொடங்கியது. இலங்கையில் 1802 ஆம் ஆண்டு தொடக்கமாக இலங்கையின் பாதுகாப்புக்காக ஆங்கிலேயர் படை இங்கே இருந்தன. அப்படையின் முழுச் செலவும் பிரித்தானிய அரசாங்கமே பொறுத்து வந்தது.

ஆனால் 1838 ஆம் ஆண்டில் பழைய நிலைமைகள் மாறியதால் இலங்கையின் பாதுகாப்புக்காக இலங்கையில் உள்ள பிரித்தானிய பட்டாளத்தின் செலவில் ஒரு பாகத்தையாவது இலங்கை அரசாங்கம் பொறுத்தால் என்ன என்பது பிரச்சினையாயிற்று. எனவே 1838 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கை அரசாங்கம் ஆண்டு தோறும் 24000 பொன் பாதுகாப்புக்காகக் கொடுக்க வேண்டுமென்றும், அத் தொகை ஆண்டு தோறும் படிப்படியாக அதிகரித்தல் வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. அக் கட்டளை தலைச் சுமையாய் இருந்தது.

அதன் பிரகாரம் கொடுக்கப்பட்டு வந்த செலவு ஆண்டுதோறும் அதிகரித்து 1863 ஆம் ஆண்டில் 100000 கொடுக்க வேண்டிய அளவுக்கு வந்தது. அந்த ஆண்டில் படைச் செலவு 200000. அதில் இலங்கையர் அரைவாசியைக் கொடுக்க வேண்டியவராயினர். அடுத்த ஆண்டாகிய 1864 இல் பிரித்தானிய அரசாங்கம் இலங்கையின் பாதுகாப்புச் செலவு முழுவதையும் இலங்கை அரசாங்கமே பொறுத்தல் வேண்டும் என அறிவித்தது. அந்த அறிவித்தல் இலங்கைக்கு கிடைக்கும் போதே இந்த அலுவலை ஆராய்வதற்கு ஓர் ஆணைச்சபை நியமிக்கப்பட்டதென்றும், அச்சபை ஏதாவது கருணை காட்டினால் மேற்சொன்ன தொகை குறைக்கப்படலாம் என்றும், ஆணையாளர் தீர்ப்பு கிடைக்கும் வரை இலங்கை அரசாங்கம் ஆண்டு தோறும் 135000 பொன் கொடுத்தல் வேண்டுமென்றும், அத்தொகை ஆண்டுதோறும் 10000 பொன்னால் அதிகரிக்க வேண்டும் என்றும் அறிவித்தது.

அந்த விதமான ஆணையைக் கேட்ட உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர், ஒரு பகல் எல்லாம் யோசித்து உருத்தெழுந்து சீறி அந்த அநியாய ஆணையை எதிர்த்தார்கள். அவர்கள் கூறிய காரசாரமான மறுப்புக் கண்டனம் சரித்திரப் பிரசித்தமானது.

அவர் கள் புகையிரதப் பாதையே நாட்டுக்கு முதற்கண் இன்றியமையாதது. அதுவே முதலில் அமைக்கப்பட வேண்டியது. ஆங்கிலேயர் தமது படைகளை இலங்கையில் வைத்திருந்தது பேரரசாட்சிக்காகவே அல்லாது வேறொன்றுக்குமல்ல, அவர்களுடைய தரைப் படை யும் கடற்படையும் இந்து சமுத்திரத்தில் தமதாணையை நிலை நாட்டவும், கப்பற் பாதைக ளைத் தமததிகாரத்துள்ளாக்கவும், இந்திய இராச்சியத்தைப் பாதுகாக்கவுமே.


அதனால் அவர்கள் நோக் கம் பேரரசைப் பலப்படுத்து வதல்லாமல் இலங்கையைப் பாதுகாத்தல் அல்ல என்று தகுந்த காரணங்களைக் காட்டி மறுத்தனர்.

**க.சி.குலரத்தினம்**

இலங்கைப் பிரதிநிதிகள் சட்டசபையில் சாதகமாகப் பணம் ஒதுக்கினால் அல்லாமல் பிரித்தானிய அரசாங்கம் நாட்டுப் பணத்தைத் தவறான வழியில் செலவிட முடியாதென வாதாடினர்.

ஆனால் உத்தியோக அங்கத்தவர் தொகை அதிகமாய் இருந்தமையால் ஆள்பதி அவர்கள் தமது நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டார். அதனால் உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவர் மனமுடைந்துபோனார்கள். (தொடரும்)





தொல்புரம் சிவபூமி முதியோர் இல்லத்தில் ஆடி அமாவாசை தினத்தன்று அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மாணவ மாணவியரால் முதியோரை மகிழ்விக்கும் முகமாக பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. கோட்ட மட்டத்தில் முதலிடம் பெற்ற மட்டக்களப்பு கிராமிய பண்பாட்டு நாடகத்தில் ஒரு காட்சியையும், பண் இசை கச்சேரி நிகழ்த்துவதனையும், நிகழ்வில் பங்குபற்றிய முதியோருடன் மாணவ மாணவிகளையும் படங்களில் காணலாம். (படங்கள்:குரு)

# 19 ஆம் நூற்றாண்டு 16



### நாடகம்

ஈழத்து இலக்கியச் செல்நெறியிலே 19 ஆம் நூற்றாண்டில் நாடகத் துறையும் குறிப்பிடக்கூடிய முக்கியத்துவத்தைப் பெறுகின்றது.

இக்காலப் பகுதியிலே இசைநாடங்களும் விலாசங்களுமே பெரும்பாலும் எழுதப்பட்டுள்ளன. கற்றுவல்ல அறிஞர்கள் மாத்திரமன்றிப் பட்டறிவின் துணைகொண்டு அண்ணாவிமார்களும் வரகவிகளும் நாடகங்களை எழுதியுள்ளனர். இக்காலத்தில் ஈழத்தில் எழுந்த நாடகங்களின் பிரதான பாடுபொருளாகப் புராண இதிகாசக் கதைகளும் சமயமுமே அமைந்தன எனலாம்.

சாதாரண மக்களுக்குத் தருமத்தின் வாழ்வையும் அதர்மத்தின் அழிவையும் புலப்படுத்துவதே இந் நாடகங்களின் நோக்கமாக அமைந்துள்ளமையும் அவதானிக்க முடிகின்றது. ஆறுமுகநாவலரின் தந்தையார் கந்தப்பிள்ளை பல நாடகங்களை எழுதினார் என்று கூறப்படுகின்றது.

தந்தையார் எழுதி நிறைவு செய்யாத நாடகமொன்றை மிக இளவயதிலே நாவலர் எழுதி முடித்தார் என்று சொல்லப்படுகின்றது. பின்னர் நாடகத்துறையை நாவலர் மிக வன்மையாகக் கண்டித்தமையை அவரது கண்டணங்களினூடு கண்டுகொள்ள முடிகின்றது. 19ஆம் நூற்றாண்டிலே பல நாடகங்கள் தோன்றிய போதும் அவற்றின் பிரதிகளை இன்று முழுமையாகப் பெறமுடியவில்லை.

நாவலரின் எதிர்ப்பும் இவை பேணப்படாது அழிந்தொழிந்தமைக்கு ஒரு காரணமாகலாம். யாழ்ப்பாணத்தில் மாத்திரமன்றி மன்னார், மட்டக்களப்பு, சிலாபம் முதலான பகுதியிலேயும் இக்காலப் பகுதியில் நாடகங்கள் (கூத்துக்கள்) பல தோன்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### ஆய்வுகள்

இக்காலப் பகுதியில் இலங்கையிலே இலக்கியம், இலக்கணம் பண்பாட்டுத் துறைகளை ஆய்வு நோக்கில் அணுகும் முயற்சியும் மெல்ல மெல்ல அரும்பத் தொடங்குகிறது. இங்கு பணியாற்றிய மிஷனரிமாரிற் சிலர் இவ்வாய்வு முயற்சிகளிலே ஈடுபாடு காட்டினர்.

நூல்களைத் தொகுத்தல், பட்டியல் தயாரித்தல், நூலாசிரியர்களை அகர வரிசைப்படுத்தி ஒழுங்குபடுத்தி அவர்களது வாழ்க்கைக் குறிப்புகளை எழுதுதல், வாய்மொழியாக வழங்கிவரும் பழமொழிகள், மரபுத் தொடர்கள், பழக்க வழக்கங்கள், சடங்காசாரங்கள் முதலானவற்றைத் தொகுத்தல் முதலான பணிகள் ஓரளவுக்கு நடைபெறத் தொடங்குகின்றன.

குறிப்பாக தமிழ் இலக்கிய வரலாறு பற்றி ஆய்வு செய்பவர்களுக்கு உதவும் வகையிலே சைமன் காசிச்செட்டியின் (1807-1860) தமிழ் புளூராக் என்னும் ஆங்கில நூலும், ஆர்னோல்ட் சதாசிவம்பிள்ளையின் (1820-1895) பாவலர் சரித்திர தீபகமும் அமைந்தன என்று கூறப்படுகின்றது.

சி.வை. தாமோதரம்பிள்ளையின் பதிப்புரைகள், சபாபதி நாவலரின் திராவிடப் பிரகாசிகை முதலியனவும் பின்வந்த இலக்கிய வரலாற்றாய்வாளர்களுக்கு ஓரளவு வழிகாட்டியாக அமைந்தன என்று கொள்ளலாம். நாட்டார் வழக்காற்றியல் துறை விருத்தியடைவதற்கு முன்னரே இங்கு பணியாற்றிய மிஷனரிமார் தமிழ் மக்களிடையே வழங்கும் நாட்டார் வழக்காற்றியற் கூறுகளைப் பதிவு செய்து வைக்கும் பணியில் ஈடுபட்டனர். 19 ஆம் நூற்றாண்டிலே ஈழத்தமிழ் மக்களிடையே வழங்கும் பழமொழிகளைத் தொகுத் துப் பேர்சிவல் பாதிரியார் இரு நூல்களாக வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

தொகுத்து நோக்கும்பொழுது ஈழத்து இலக்கியச் செல்நெறியிலே 19 ஆம் நூற்றாண்டு பல வழிகளில் முக்கியத்துவம் வாய்ந்த காலப் பகுதியாகக் காணப்படுகின்றது. ஈழத்துப் புலமைப் பாரம்பரியம் ஈழம் கடந்த செல்வாக்கைப் பெற்ற சிறந்த காலப் பகுதியாக 19 ஆம் நூற்றாண்டினைக் கொள்ளலாம்.

ஈழத்து இலக்கியச் செல்நெறியிலே 19 ஆம் நூற்றாண்டின் முக்கியத்துவம் பற்றிப் பேராசிரியர் கைலாசபதி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

*சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்து (19 ஆம் நூற்றாண்டு) மொழி, இலக்கியம் ஆகியவற்றில் ஒரு வகையான நெகிழ்ச்சியும் மரபின் பிடியிலிருந்து மெல்ல மெல்ல விடுபட்டு நிற்கும் மனப்பான்மையும் சமய நோக்கிலிருந்து சமூக நோக்கிற்குப் பெயரும் போக்கும் சில இலக்கிய ஆசிரியர்களிடையே ஓரளவு காணப்பட்டமை கருத்திற் கொள்ள வேண்டியதாகும்.*

*இவற்றின் விகர்சிப்பையும் பரிணாமத்தையும் அடுத்த நூற்றாண்டில் (20 ஆம் நூற்றாண்டில்) அழுத்தமாகக் காணக்கூடியதாக இருக்கிறது.*

இருபதாம் நூற்றாண்டின் இலக்கியச் செல்நெறிக்கான 'ஊற்றுக்கள்' 19 ஆம் நூற்றாண்டிலேயே தொடங்கிவிட்டன என்பதையே மேற்காட்டிய மேற்கோள் புலப்படுத்துகின்றது.

**பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா**

19 ஆம் நூற்றாண்டின் ஈழத்துத் தமிழறிஞர்கள் பலர் முதன் முயற்சியாளர்களாகத் தமிழ் கூறும் நல்லுலகினால் அங்கீகரிக்கப்பட்டனர். தமிழ் இலக்கிய வரலாற்றில் 19 ஆம் நூற்றாண்டு இலங்கைக்குரியதென விதந்து பேசப்படுகின்றது. (முற்றும்)

# ஈழத்துத் தமிழ் இலக்கியம்

# ஒலிம்பிக் போட்டியின் போது தாக்குதல் நடத்துவோம் சீனாவுக்கு முஸ்லிம் தீவிரவாதிகள் மிரட்டல்

சீனாவின் தலைநகர் பீஜிங்கில் ஒலிம்பிக் போட்டி நடக்கும்போது அதை சீர்குலைக்கும் வகையில் தாக்குதல் நடத்துவோம் என்று இஸ்லாமிய தீவிரவாதிகள் சீனாவுக்கு மிரட்டல் விடுத்தனர்.

சீனாவின் மேற்கு பிரதேசத்தில் உள்ள ஷின்ஜியாங் பிரதேசத்தில் பெரும்பான்மையின மக்கள் முஸ்லிம்கள் ஆவார்கள். இவர்கள் உய்க்குர் எனப்படும் இனத்தை சேர்ந்தவர்கள் இந்த பிரதேசத்துக்கு தனிநாடு கோரி சில தீவிரவாதிகள் போராடி வருகிறார்கள்.

இவர்கள் இதற்காக டர்கிஸ்தான் இஸ்லாமிய கட்சி என்ற பெயரில் தனி அமைப்பை தொடங்கி தனி நாடு கோரி போராடி வருகிறார்கள். இந்த அமைப்பைச்சேர்ந்த தீவிரவாதிகள் பாகிஸ்தானில் தங்கியிருந்து அல்கொய்தா தீவிரவாதிகளிடம் ஆயுதப்பயிற்சி பெற்று வருகிறார்கள்.

சீனாவில் பீஜிங் ஒலிம்பிக் போட்டி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியது. இந்த போட்டி நடக்கும்போது நாங்கள் தாக்குதல் நடத்துவோம் என்று டர்கிஸ்தான் இஸ்லாமிய கட்சி தீவிரவாதிகள் மிரட்டியுள்ளனர். அவர்கள் 6 நிமிடம் ஓடக்கூடிய ஒரு வீடியோ கசட்டை அனுப்பிவைத்துள்ளனர்.

இந்த வீடியோ கசெட்டில் கறுப்பு டர்பன் அணிந்த முகத்தை துணியால் மூடிக் கொண்ட ஒரு தீவிரவாதி துப்பாக்கியுடன் தோன்றுகிறார். அவர் பேசுகையில், உங்கள் பக்கத்தை தேர்ந்து எடுத்துக்கொள்ளுங்கள். சீனர்கள் இருக்கும் கட்டங்களில் இருக்காதீர்கள். சீனர்கள் பயணம் செய்யும் பஸ்களில் பயணம் செய்யாதீர்கள். சீனர்கள் செல்லும் ரயில் களில் பயணம் செய்யாதீர்கள் என்று முஸ்லிம்களை அவர் எச்சரித்தார்.

அந்த வீடியோவில் பேசியவர், முஸ்லிம்களை மோசமாக நடத்தியதற்காகத்தான் புனிதப்போர் தொடங்கப்பட்டுள்ளது. சீனா முஸ்லிம்களை கட்டாயப்படுத்தி நாத்திகர்களாக மாற்றி வருகிறது. இஸ்லாமிய பள்ளிகளை இடித்து வருகிறது. இஸ்லாமிய ஆசிரியர்களைக் கொன்று குவித்து வருகிறது என்று குற்றஞ்சாட்டினார்.

இந்த மிரட்டலை தொடர்ந்து ஒலிம்பிக் போட்டிக்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட இராணுவ வீரர்கள், பொலிஸார் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டு உள்ளனர். (அ-6)

## 'யூரோ சிற்றி' தடம்புரண்டதில்10 பேர் பலி; 100 பேர் காயம்

ஐரோப்பிய நாடுகளுக்கு இடையே ஓடும் யூரோசிற்றி ரயில் தடம் புரண்டதில் 10 பேர் பலியானார்கள். 100பேர் காயம் அடைந்தனர்.

இந்த ரயில் போலந்து நாட்டில் உள்ள கிராகோவ் நகரில் இருந்து செக் குடியரசு நாட்டின் தலைநகர் பிரேக் நகரை நோக்கி சென்றது. மணிக்கு 140 கி.மீ.வேகத்தில் சென்ற இந்த ரயில் ஸ்டுடன்கா என்ற இடத்தில் சென்ற போது தடம்புரண்டது இதில் 10 பேர் பலியானார்கள். (அ-6)

## அழகுராணிப் போட்டிக்கு பெண் எம்.பிக்கள் எதிர்ப்பு

(காத்மண்டு)

நேபாளத்தில் இவ்வருட அழகுராணியைத் தெரிவு செய்வதற்கு நடத்தப்படவிருந்த போட்டி, அந்நாட்டு பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் எதிர்ப்பால் பிற்போடப்பட்டுள்ளது. அழகுராணிப் போட்டியானது பெண்களைப் பொழுதுபோக்குப்பொருட்களாக சித்திரிப்பதாக நேபாள மாவோவாத கட்சியைச் சேர்ந்த மேற்படி உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

ஒகஸ்ட் 7ஆம் திகதி நடைபெறவிருந்த "மறைந்த பொக்கிஷம்" என்ற இந்த அழகுராணிப் போட்டியானது, மாவோவாத பெண் எம்.பிக்களின் எதிர்ப்பால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் ஜிரேந்திர மன்ராஜ்பான்ஷி உறுதிப்படுத்தினார். இந்நிலையில் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் மாவோவாத பெண் எம்.பி.க்களுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளனர். (அ-6)

# எரிபொருள் விலை ஏற்றத்தை அடுத்து வீட்டில் இருந்து வேலை செய்ய அமெரிக்க நிறுவனங்கள் சலுகை

(வோஷிங்டன்)

ஆபீஸ் வந்து வேலைசெய்ய வேண்டாம் வீட்டிலேயே லப்டொப்பில் வேலை செய்யுங்க ஊழியர்கள் வேலைக்கு வந்து செல்ல இலவச சைக்கிள் வழங்கப்படும். உங்கள் வீட்டு அருகே உள்ள அலுவலகத்துக்கு இடமாற்றம் செய்யலாம். தினமும் 10 மணி நேரம் வீதம், வாரத்தில் இனி நான்கு நாட்கள் தான் வேலை இப்படி மைக்ரோசொப்ட் உட்பட பல அமெரிக்க நிறுவனங்கள் அதிரடியாக பல சலுகைகளை அறிவித்துள்ளன.

அமெரிக்காவில் கார் காசோலின் (காருக்கு எரிபொருளாக பயன்படுத்தும் காஸ்) விலை உயர்ந்துவிட்டதுதான் இதற்குகாரணம்

ஒருபக்கம் வேலையில்லா திண்டாட்டம் அதிகரித்து வந்தாலும், இன்னொரு பக்கம் ஊழியர்கள் பற்றாக்குறை ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் பல முன்னணி நிறுவனங்கள் அக்கறை காட்டுகின்றன. அதனால் ஊழியர்களுக்கு வசதியாக பல சலுகைகளை அளித்து வருகின்றன. பிரபல சொப்ட்வெயார் நிறுவனமான மைக்ரோசொப்ட் வோஷிங்டனில் மட்டும் ஏழு இடங்களில் கட்டங்களை வாடகைக்கு எடுத்து, கிளைகளை ஆரம்பித்துள்ளது. ஊழியர்கள் நடந்தே வந்து வேலை செய்யலாம் என்பதால்.

அதுபோல சில் நிறுவனங்கள் உயர் ரக லப்டொப் கம்ப்யூட்டர்களை வழங்கி வீட்டிலேயே வேலை செய்யும் படி ஊழியர்களுக்கு வசதி செய்து தந்துள்ளன. ஒரு நிறுவனம், தன் ஊழியர்கள் வேலைக்கு வர, சைக்கிள்களை இலவசமாக அளித்துள்ளது.

அதுபோல அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் நிறுவனம் ஊழியர்களுக்கு காசோலின் கார்டு அளித்துள்ளது.

**உலக தரிசனம்**

இதை வைத்து எரிபொருள் நிலையங்களில் இலவசமாக காசோலின் நிரப் பிக் கொள்ளலாம். மற்றொரு சொப்ட் வெயார் நிறுவனம், தினமும் 10 மணி நேரம் வேலை செய்யவைத்து வாரத்துக்கு நான்கு நாள் மட்டும் பணி நாளாக அறிவித்துள்ளது. மூன்று நாட்கள் விடுமுறை விடுகிறது. (அ-6)

# ரஷ்ய தாக்குதலைத் தொடர்ந்து ஜோர்ஜியாவில் யுத்தநிலை பிரகடணம்

(ஜோர்ஜியா)

ஜோர்ஜியாவிலே பிரிவினை கோரும் தெற்கு அஸ்ஸெட்டியா பிராந்தியத்தின் அருகில் அமைந்துள்ள கோரி நகரில் ரஷ்ய விமானங்கள் தாக்குதல் நடத்தியுள்ளநிலையில் ஜோர்ஜியா வில் யுத்த நிலை யை பிரகடனம் செய்யும் அதிபரின் ஆணைக்கு அந்நாட்டின் நாடாளு மன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.



தெற்கு அஸ்ஸெட்டியாவின் தலைநகர் ஷின்வாலியைக் முற்றுகையிட ஜோர்ஜியர்கள் செய்த முயற்சிக்குப் பின்னர் அந்நகரின் கட்டுப்பாட்டை ரஷ்யத் துருப்பினர் கைப்பற்றியுள்ளதாகவும் ரஷ்யா தெரிவித்துள்ளது. இதே வேளை தங்களது விமானங்கள் இரண்டு சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளன என்பதையும் ரஷ்யா உறுதிப்படுத்தியுள்ளது.

**அப்காஸியப்பிரிவினைவாதிகளும் ஜோர்ஜியப் படைகள் மீது தாக்குதல்**

ஜோர்ஜியாவில் இருக்கின்ற மற்றுமொரு பிரிந்துபோன பிராந்தியமான அப்காஸியாவில் இருக்கின்ற பிரிவினைவாதிகள் கொடொரி கோர்ஜில் உள்ள ஜோர்ஜியப் படைகள் மீது தாம் வான் மற்றும் பீரங்கித் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளதாக கூறிகிறார்கள்.

கோர்ஜில் இருக்கின்ற ஜோர்ஜியப் படைகளை அங்கிருந்து விரட்டுவதே தமது நோக்கம் என்று அப்காஸியாவில் சுய அரசாங்கத்தை பிரகடனம் செய்துள்ள ஆட்சியாளர்களின் வெளியுறவு அமைச்சர் கூறியுள்ளார்.

**ஜோர்ஜியா நிலவரம்; புஷ் கவலை**

ஜோர்ஜியாவில் உருவாகியுள்ள நெருக்கடி குறித்து தன் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளதாக அதிபர் புஷ் கூறுகின்றார். ஒலிம்பிக் துவக்கவிழாவில் கலந்து கொண்டிருந்த அதிபர் புஷ் பீஜிங்கிலிருந்து கருத்து வெளியிடுகையில் ஜோர்ஜிய நிலப்பரப்பின் ஒருமைப்பாடு மதிக்கப்பட வேண்டும் என்று தெரிவித்தோடு குண்டுவீசு வதை ரஷ்யா நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார். (அ-6)

# ஒலிம்பிக் போட்டி நிகழ்ச்சியின் போது திபெத்தியர்களின் ஆர்ப்பாட்டம்

ஒலிம்பிக் போட்டி நிகழ்ச்சியின் போது திபெத்தியர்கள் இருவர் ஆர்ப்பாட்டத்தில் ஈடு பட்டனர்.



பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டிருந்த போதும் குதிரைச் சவாரிப் போட்டி நடைபெறும் இடத்தில் திபெத்திய மாணவி ஒருவர் திபெத் கொடியை உயர்த்தி ஆர்ப்பாட்டம் செய்தார்.

அவருடன் இன்னுமொரு மாணவரும் இணைந்திருந்தார். கனடா கொடியுடன் மறைத்து இவர்கள் திபெத் கொடியை கொண்டு சென்றிருந்தனர். இவர்களை அங்கிருந்து வெளி யேறு மாறு கேட்டபோதும் அவர்கள் அதற்கு மறுத்தனர். பின்னர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அவர்களை தூக்கிச் சென்று அப்புறுப்படுத்தினர். (அ-6)

# அமெரிக்க கரப்பந்தாட்ட அணிப் பயிற்றுவிப்பாளரின் உறவினர் பீஜிங்கில் குத்திக்கொலை

பீஜிங் ஒலிம்பிக்கில் நேற்று அமெரிக்க சுற்றுலாப்பயணி ஒருவரை சீனர் ஒருவர் கொன்றுள்ளார். கொல்லப்பட்டவர் அமெரிக்க கரப்பந்தாட்ட அணியுடைய பயிற்சியாளரின் உறவினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அந்த அமெரிக்கரும் ஒரு பெண் உறவினரும் அவர்களுடைய சீன வழிகாட்டியும் பீஜிங் நகர மையத்திலுள்ள பழங்காலக் கோபுரத்தில் இருக்கையில் சீனர் தாக்கியுள்ளார்.

அமெரிக்கரைக் கொன்ற பின்னர் அந்த சீனரும் கோபுரத்திலிருந்து குதித்து தற்கொலை செய்துகொண்டுள்ளார். தாக்கு தலுக்குள்ளான பெண்ணும் வழிகாட்டியும் மருத்துவமனையில் சிகிச்சைபெற்றுவருகிறார்கள். இந்தக் கொலையின் காரணம் என்ன என்பது இன்னும் தெரியவில்லை. சீனாவில் வெளிநாட்டினர் தாக்குதலுக்குள்ளாவதென்பது அரிதாக நடக்கும் விஷயம். (அ-6)

# சீன ஹோட்டல் மெனுவில் விசித்திரம் வெளிநாட்டு பயணிகள் வியப்பு

சீனாவில் நடக்கும் ஒலிம்பிக் போட்டியை காண, வெளிநாட்டில் இருந்து வந்து குவிந்துள்ள சுற்றுலா பயணிகள், அங்கு பரிமாறப்படும் உணவு வகைகளை பார்த்து வியப்பில் ஆழ்ந்துள்ளனர். சிலர் மனதை திடப்படுத்திக் கொண்டு, அந்த உணவு வகைகளை ருசித்து பார்க் கின்றனர். பீஜீங்கில் வாங்புஜிங் சிற்றுண்டி தெரு வுக்கு செல்வோர் , அங்கு சாலையோர கடைகளில் சமைப்பதற்காக வைக்கப்பட்டு இருக்கும் விலங்குகளையும், பரிமாறப்படும் உணவு வகைகளையும் வியப்புடன் பார்க்கின்றனர்.

பல்வேறு உணவு விடுதிகளில் மெனுக்கள் விதவிதமாக உள்ன. பறப்பவற்றில் விமானத்தையும், மிதப்பதில் கப்பலையும், நடப்பதில் மனிதர்கள் தவிர மற்ற அனைத்து உயிரினங்களும், இந்த கடைத்தெருவில் உணவாக பரிமாற்றப்படுகின்றன. கருந்தேள் வறுவல், கரப்பன் பூச்சி பொரியல், நாய்மூளை சூப், நாய் தலைக்கறி பொரியல், நாயக்கறி மசாலா, கடற்குதிரை லாலிபாப், குதிரை சூப், பாம்பு வறுவல், பாம்பு சூப் பல்லி சாண்ட்விச், உடும்புக் கறி, உடும்புவால் சூப் என்று வித விதமான உணவுகள் பரிமாறப்படுகின்றன. சீன அரசின் அங்கீகாரம் பெற்ற உணவு விடுதிகளில் மட்டும் நாய்க்கறி பரிமாறப்படு வதில்லை. மற்ற சாலையோர கடைகளில் தாராள மாக கிடைக்கின்றன. சீனாவில் பிரபலமான பைஜூ மதுவுடன் மான் கொம்பு ஊறுகாய் இலவசமாக வழங்கப்படுகிறது. சீனர்கள் நாய் இறைச்சி மற்றும் கழுதை இறைச்சியை விரும்பி சாப்பிடு கின்றனர். (அ-6)

# அதிபர் பதவியில் இருந்து முஷாரப் விலகுவது விரும்பத்தக்கது-இராணுவத் தளபதி

பாகிஸ்தான் அதிபர் முஷாரப் பதவியில் இருந்து விலகுவது நல்லது என்று அந்நாட்டு இராணுவத்தின் தளபதி விரும்புவதாக லண்டனில் இருந்து வெளியாகும் தி டெய்லி டெலி கிராப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. இது பற்றி அவரிடம் ஒரு வாரத்தில் தனது கருத்தை பாகிஸ்தான் இராணுவம் தெரிவிக்கும் என்று அந்த பத்திரிகையில் செய்தி வெளியாகியுள்ளது.

அவரைப் பதவி நீக்கம் செய்தால் அதன் பிறகு அவர் மீது குற்றம்சாட்டி சிறையில் அடைக்க வாய்ப்புள்ளது. எனவே நாட்டை விட்டு வெளியேற இதுதான் சரியான நேரம் என்று முஷராப்பிடம் இராணுவத் தளதிப ரகசிமாகச் சொல்லிவிட்டாராம் அதே நேரத்தில் பதவி யிலிருந்து நீக்கப்பட்டாலும் முஷாரப்பை தண்டிக்க மாட்டோம் என்று ஆளும் பாகிஸ்தான் மக்கள் கட்சியைச்சேர்ந்த மூத்த தலைவர் ஒருவர் கூறினார்.

அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டால் அவரை பாதுகாப்பாக நாட்டிலிருந்து வெளி யேற்ற அரசிடம் இராணுவம் கோரும் என்று முஷராப் பின் முன்னாள் இராணுவ உதவியாளர் ஒருவர் லண்டன் பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார். (அ-6)

# மோதல் காரணமாக வன்னியில் இருந்து இரண்டு இலட்சம் மக்கள் இடம் பெயர்வு!

## ஐ.நா.அலுவலகம் தெரிவிப்பு

(கெழும்பு)

வன்னியில் மோதல்கள் உக்கிரமடைந்திருக்கின்ற நிலையில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து அரச கட்டுப் பாட்டுப் பகுதிகளுக்கு சுமார் 2இலட்சம் பேர் இடம்பெயர்வார்கள் என ஐக்கிய நாடுகளின் சபையின் கொழும்பு அலுவலகம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு இடம்பெயரவுள்ள மக்களுக்கான உணவு, தற்காலிக கூடாரங்கள் ஆகியவற்றை வழங்க ஐக்கிய நாடுகள் முகவர் நிறுவனங்கள் தயாராக இருப்பதாகவும் ஐ.நா. கொழும்பு அலுவலகத்தின்பேச்சாளர் கோர்டன் வைஸ் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே ஒரு இலட்சத்து 25 ஆயிரம் பேர் வன்னியில் இடம் பெயர்ந்துள்ளதாக குறிப்பிட்டுள்ள அவர் மேலும் 55 ஆயிரம் முதல் 75 ஆயிரம் பேர் வரையானோர் இடம்பெயரவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

ஆனால் இவர்களில் 800 பேர் மாத்திரமே அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் வந்தடைந்துள்ளதாகவும் கோர்டன் வைஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தில் சுமார் ஒருஇலட்சத்து 28ஆயிரம் மக்கள் இடம் பெயர்ந்து தற்காலிக கூடாரங்களில் தங்கியிருப்பதாக முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கே. விஸ்வநாதன் தெரிவித்துள்ளார்.

இவர்களில் 28ஆயிரம் பேர் மன்னார், மல்லாவி, துணுக்காய் ஆகிய பகுதிகளில் இருந்து புதிதாக இடம் பெயர்ந்து வந்தவர்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மிக அதிமானோர் இடம்பெயர்ந்துள்ள நிலையில் அவர்களுக்கான உணவும் ஏனைய வசதிகளும் இரு வாரங்களுக்கே போதுமானதாக காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த வெள்ளிக் கிழமை நடாத்தப்பட்ட ஷெல் தாக்குதல் ஒன்றில் முல்லைத்தீவு அர சாங்க அதிபர் இமல்டா சுகுமார் உட்பட 17 பொதுமக்கள் காய மடைந்தனர். இராணுவத்தினரே இந்தத் தாக்குதலை மேற்கொண்டதாக புலிகள் குற்றம் சாட்டியிருந்த போதிலும் இராணுவத்தினர் அதனை மறுத்திருந்தனர்.

இந் நிலையில் முல்லைத்தீவு அரசாங்க அலுவலகங்கள் அமைந்துள்ளபகுதியை பாதுகாப்புவலயமாக பிரகடனப்படுத்தக்கோரி அரசாங்க ஊழியர்கள் கடந்தவெள்ளிக் கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

விடுதலைப்புலிகளும் இராணுவத்தினரும் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் கோரிக்கை விடுத்தனர். (அ-6)

# நிர்வாக சேவை வெற்றிடங்களை நிரப்ப உடனடி நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கை நிர்வாக சேவையில் காணப்படும்வெற்றிடங்களை உடனடியாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக பொது நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை நிர்வாக சேவையில் சில காலமாக பல்வேறு வெற்றிடங்கள்நிலவிய போதிலும் அவற்றை நிரப்புவதற்கு தாமதமானதால்-நிர்வாகப்பிரச்சினைகள் எழுந்திருந்தன.

எவ்வாறாயினும் பதவி உயர்வுகளின் பிரகாரம் இலங்கை நிர்வாக சேவை 3ஆம் வகுப்புக்கு நியமிக்க அரச சேவைகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

இதன்பிரகாரம் தகமைஅடிப்படையில் இலங்கை நிர்வாக சேவை 3ஆம் நிலைக்கு தேர்வு செய்யப்படும் அதிகாரிகளுக்கு விசேடபயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

பதவி உயர்வுக்கு தகுதி பெற்றவர்களுக்கான பயிற்சிகளை இம் மாதம் 18ஆம் திகதி முதல் ஆரம்பிப்பதாக பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் டி.திஸாநாயக்க தெரிவித்தார்.

இந்தப் பயிற்சிகளை சுமார் ஒரு மாத காலத்துக்கு வழங்க எண்ணியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

பயிற்சி முடிவடைந்த பின்னர் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் உரிய பதவிகளுக்கான நியமனம் வழங்கப்படும் என பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் கூறினார்.

இதேவேளை பகிரங்கப் போட்டிப்பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் இலங்கை நிர்வாகத் துறையின் 3ஆம் வகுப்பில் சுமார் 300 பேரை சேர்த்துக்கொள்ள எண்ணியுள்ளதாக பொதுநிர்வாக அமைச்சு கூறியுள்ளது.

எவ்வாறாயினும் இந்த பரீட்சைப் பெறுபேறுகள் இதுவரை வெளியிடப்படவில்லை நிர்வாகத் துறையில் இணைந்துக்கொள்ள எதிர்பார்த்து உள்ளவர்களின் எண்ணிக்கையை பரீட்சைகள் திணைக் களகத்திற்கு அறிவித்ததன் பின்னர் உடனடியாக அந்தப்பெறுபேறுகள் வெளியிடப்படும் என பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் மேலும் குறிப்பிட்டார்.(அ)

# தேசிய அடையாள அட்டையின்றி தோற்றியோரின் பெறுபேறுகள் தாமதமாகும்

## பரீட்சைகள் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இம் முறை கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் தேசிய அடையாள அட்டையின்றி தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் பெறுபேறுகள் தாமதத்தே வெளியிடப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர [illegible]சிங்க தெரிவித்தார்.

இது போன்றமாணவர்களின் விடைத்தாள்கள் விசேட பரிசீலினைக்கு உட்படுத்தப்படும். என அவர் கூறினார். கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் தோற்றுவதற்காக தேசிய அடையாள அட்டை அல்லது தபால் அடையாள அட்டையைச் சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயம் ஆக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் ஒரு சில காரணங்களுக்காக தேசிய அடையாள அட்டை இன்றி அடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடிய வேறு ஆவணம் ஒன்றை சமர்ப்பிக்க அனுமதி பெற்றுள்ள மாணவர்கள் அதற்கான யோசனைகளை பரீட்சை மேற்பார்வையாளர்களிடம் கேட்டறிய முடியும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 6ஆம்திகதி ஆரம்பமான கல்விப்பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையுடன் தொடர்புடைய மோசடி குறித்து இதுவரை எந்தவொரு முறைப்பாடும் கிடைக்கவில்லையென பரீட்சைகள் ஆணையாளர்நாயகம் மேலும் குறிப்பிட்டார். (அ)

# இலங்கை பத்திரிகை நிறுவகத்துக்கு நிதி ஐரோப்பிய ஒன்றியத்திடம் ரணில் வேண்டுகோள்

(கொழும்பு)

ஊடக அடக்கு முறைகளுக்கு முகம் கொடுப்பதற்காக இலங்கை பத்திரிகை நிறுவனத்திற்கு நிதியுதவி வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க பிரான்ஸ் தூதுவர் மைக்கல்லும் மாஸ் ஊடாக ஐரோப்பிய ஒன்றியத்திடம் வேண்டுகோள் விடுத்துள் ளார்.

இலங்கை பத்திரிகை ஆசிரியர் குழுவும் இலங்கை பத்திரிகைச் சங்கத்தைச்சேர்ந்தபலர் அச்சுஊடகவியலாளர்களுடனானசந்திப்பைஅடுத்தே ரணில் விக்கிரம சிங்க இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இச் சந்திப்பில் ஊடகத்துறையினர் கடத்தப்படுதல் மற்றும் தாக்கப்படுதல் காரணமாக ஊடகவியலாளர்கள் முகம் கொடுக்கும் அச்சுறுத்தல் தொடர்பாக கலந்துரையாடப் பட்டது. (அ-6)

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சொத்துக்களை முடக்க நியூசிலாந்து அரசாங்கம் தீர்மானம்

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனைத் துச் சொத்துக்களையும் நியூசிலாந்து அரசாங் கம் முடக்குவதற்கு தீர்மானித்துள் ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவின் எவ்.பி.ஐ புலனாய்வு நிறுவத்தின் அறிக்கையொன்றை அடிப்படையாகக் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக் கப் பட்டுள்ளது.

சுனாமி நிவாரணப் பணிகளுக்காக நியூசிலாந்து அரசாங்கம் தமிழர்புனர்வாழ் வுக்கழ கத்திற்கு 120,000 டொலர்களை நன் கொடையாக வழங்கியுள்ளது. தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின்நியூசி லாந்துக் கிளையும் விடுதலைப்புலிகளுக்கு நிதி திரட்டியதாகத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. (அ)

## நல்லூரான் திருவடிக்கு

## இன்று ஆறாம் திருவிழா



### கருணைக் கடலே காத்து அருள்புரிவாய்

வளநல்லூர்க் கந்தா வள்ளி மணவாளா
படைவீடு கொண்ட பரமன் திருமைந்தா
ஓம் என்னும் பொருளுரைத்த உமையாள் திருக்குமரா
எழிலார் வேல் தாங்கி எமைக்காக்கும் தெய்வமே
தேனான தமிழ்மக்கள் வாழ்விழந்து நித்தம்
சித்தம் கலங்கி நாம் செய்வதறியாது
நித்தமும் உன்னை நினைந்து தொழுகின்றோம்
கருணைக் கடலே காத்து அருள்புரிவாய்

*கலாபூசணம் மு.தணிகாசலம்*
*கற்கோவளம்.*

### நல்லூரான் நெறி இந்தப் பாரிலில்லை

நல்லூர் முருகனைப் பார்த்ததுமே – உள்ளம்
இன்பத்தில் மூழ்கித் திளைக்குதையா
பக்திப் பரவசம் தோன்றுதையா – கொடிய
பற்றுப் பாசம் விலகுதையா
எப்படிச் சொல்வேன் அவன் செயலை – அதை
சொல்லிட வார்த்தைகள் எனக்கேது
நறு மணம் வீசிட உலா வருவான் – அந்த
அற்புத அமைதியில் வினை தீர்ப்பான்
எப்படிச் சொல்வேன் நினைக்கையிலே – அங்கு
தூய்மையும் காலமும் தவறவில்லை
கண்கண்ட எசமான் குடும்பத்தில் – நல்
பக்தியின் இலக்கணம் சிறக்குதையா
ஏழைக்கும் எட்டிடும் ரூபாய் ஒன்றில் – முருகன்
பேரின்ப அமைதியைத் தந்திடுவான்
நல்லூரான் நெறி இந்தப் பாரிலில்லை – இந்த
நல்லூரின் அர்த்தம் முருகன் அன்றோ?

*மலர்–சின்னையா*
*(செம்பியின் செல்வி)*

### அல்லலுறும் எமக்கு அருள் தர வேண்டும்

பிரணவப் பொருள் தந்த வேலனே
சரவணப் பொய்கையின் பாலனே
கார்த்திகை மைந்தனே எம் கடம்பா
ஊர்த்திசை எங்கும் உன் அருட்பா
அலங்கார வேலவனே வேல் முருகா
கலங்காமல் காப்பாய் கார்த்திகை மருகா
பால் கொண்ட உன் திருவுருவம் நோக்க
வேல் கொண்ட உன் காவடியே காக்க
மனதைக் கல்லாக்கி கதறிடும் எமக்கு
தனது வேலை அருளாக்கும் முருகனே வாக்கு

*சி.சிறீதரன்– கொட்டடி*

### நல்லைக் கந்தன்

வீசும் காற்றும் இங்கு உன் பெயர் சொல்லிவரும்
முருகா...... முருகா.......
ஓடும் நதியும் இங்கு உன் புகழ் உரைத்திடுமே
முருகா....... முருகா....
அகிலத்தை ஆளும் முருகா அடியவர் கண்களில் அழகா
வள்ளியை மணந்த மருகோனே சூரனை அழித்த பெருமானே
நாமங்கள் பல உண்டு நாவினிக்க நாம் பாட
எங்கள் முத்துக் குமரனுக்கு

*ஏ.மௌலீசன் –மானிப்பாய்.*

### நல்லூர் நம்பானை நையும் நன்றே

நல்லூர் பிறைசூடிப் பிரானை நாளெலாம்
சொல்லூர் நாமத்தால் துதித்துத் தொழுதேத்த
வல்லூர் வேலனைத் தந்து வாழ்விப்பார்
நல்லூர் நம்பானை நையும் நன்றே

*சிவ. சண்முகவடிவேல்.*

# குண்டு துளைக்காத கார்களுக்காக முண்டியடிக்கும் அமைச்சர்கள்

(கொழும்பு)

சார்க் மாநாட்டுக்காக இறக்குமதி செய்யப்பட்ட குண்டு துளைக்காத வாகனங்களுக்காக அமைச்சர்கள் மத்தியில் மோதல் நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சார்க் மாநாட்டுக்காக 31 குண்டு துளைக்காத கார்களும் 100 ஜீப் வாகனங்களும் இறக்குமதி செய்யப்பட்டன.

இந்த நிலையில் பல அமைச்சர்கள் குண்டு துளைக்காத கார்களைப் பெற்றுக்கொள்வதற்காக உயர் காவல்துறை அதிகாரிகளிடம் தமது பெயர்களையும் புலனாய்வுத் தகவல்களில் அச்சுறுத்தல்கள் இருப்பதாகக் காட்டும் வகையில் சேர்த்துக் கொள்ளுமாறு கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அச்சுறுத்தல்கள் உள்ள அமைச்சர்களுக்கே குண்டு துளைக்காத கார்கள் வழங்கப்படவேண்டும் என ஜனாதிபதி உத்தரவிட்டமை காரணமாகவே இந்த உத்தியை அமைச்சர்கள் கையாண்டுள்ளனர். புலனாய்வுத் தரப்பினரின் தகவல்படி 25 அமைச்சர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்தக் கார்களில் ஒன்று ஜே.என்.பியின் தலைவர் விமல் வீரவன்ச மற்றும் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கும் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அமைச்சர்களான மைத்திரிபால சிறிசேன, நிமல் சிறிபால டி சில்வா, ரஞ்சித் சியம்பலாபிட்டிய, மஹிந்த சமரசிங்க. ரிசாட் பதியுதீன் மற்றும் மிலிந்த மொறகொட ஆகியோருக்கும் இந்தக் கார்கள் வழங்கப்படவுள்ளன.

சார்க் மாநாட்டுக்காக இந்தியாவில் இருந்தும் ஐக்கிய இராச்சியம் ஜேர்மனி மற்றும் செக் மக்கள் குடியரசு ஆகிய நாடுகளில் இருந்தும் இந்தக் கார்கள் இறக்குமதி செய்யப்பட்டன. இதில் 12 கார்கள் 1.8 மில்லியன் டொலர்களுக்கும் 15 கார்கள் 3.7 மில்லியன் டொலர்களுக்கும் ஏனைய 4 கார்கள் 13.23 மில்லியன் டொலர்களுக்கும் இறக்குமதி செய்யப்பட்டன. (அ-6)

## பாலத்துறையில் கொலையுண்டவர்களில் இருவர் தமிழர்கள்

(கொழும்பு)

கொழும்பு பாலத்துறை பகுதியில் வெள்ளியன்று இரவு சுட்டுக்கொல்லப்பட்ட மூவரும் இனம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் இருவர் தமிழர்கள் ஒருவர் சிங்களவர் பாலத்துறையைச் சேர்ந்த சத்தியநாதன் (32 வயது) மோதரையைச் சேர்ந்த விஜயகுமார் (வயது 30) வெலிவிரயைச் சேர்ந்த அனுர ஆகியோரே சுட்டுக்கொல்லப்பட்டவர்கள் ஆவார்.

இவர்கள் மூவரும் வெள்ளிக்கிழமை இரவு 9 மணியளவில் பாலத்துறை பாலத்திற்கு கீழாக லூக்காஸ் வீதியில் செல்லும் போது இனந்தெரியாதவர்களால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் ஸ்தலத்திலேயே பலியானவர்கள் ஆவர்.

(அ-6)

# ஆணைக்குழுவின் விசாரணைகள் குறித்து பிரான்ஸ் அரசாங்கம் மகிழ்ச்சி

## பாலித கோஹண தெரிவிப்பு

(கொழும்பு)

மூதூரில் படுகொலை செய்யப்பட்ட அக்ஷன்பெய்ம் பணியாளர்கள் 17 பேரினதும் கொலைகள் குறித்த விசாரணை ஆணைக்குழுவின் விசாரணைகள் தொடர்பாக பிரான்ஸ் மகிழ்ச்சியடைவதாக இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித ஹோகண கூறியுள்ளார்.

பிரான்ஸ் அரசாங்கம் எம்முடன் தொடர்பிலேயே உள்ளது. இதுவரை விசாரணை ஆணைக்குழுவால் நடத்தப்பட்ட விசாரணைகள் பற்றி அவர்கள் மகிழ்ச்சியடைகின்றனர் என பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற கருத்தரங்கொன்றில் ஹோகண தெரிவித்தார்.

கிழக்கு மற்றும் ஆசிய பிராந்தியங்களில் உள்ள சிலநாடுகள் அக்ஷன்பெய்ம் பணியாளர்களின் கொலை பற்றிய விசாரணை ஆணைக்குழுவின் விசாரணைகளுக்கு தொடர்ந்தும் ஆதரவு வழங்கி வருவதுடன் சில நாடுகள் விசாரணைகள் குறித்து திருப்தியடைய வில்லை என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை பணியாளர்களின் படுகொலை தொடர்பான விசாரணைகள் நடை பெற்றுக் கொண்டிருக்கும் தருணத்தில் ஏன் அக்ஷன் பெய்ம் நிறுவனம் நாட்டை விட்டு வெளியேறியது என்பதை அவர்கள் விளக்க வேண்டியுள்ளது என இராணுவத்தின் சட்டத்தரணி கொமின் தயாசிறி கூறினார். விசாரணைகள் இடம் பெற்றுக் கொண்டிருக்கும் போது அவர்கள் வெளியேறியிருப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது எனத் தெரிவித்தார்.

கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள் பலர் சாட்சியமளித்துள்ளனர். அக்ஷன் பெய்ம் நிறுவனம் தமது பணியாளர்களை தொடர்ந்தும் மூதூரில் தங்கியிருக்குமாறு பணிப்புரை வழங்கியதாக சாட்சியமளித்த குடும்ப உறுப்பினர்களில் பலர் குற்றஞ்சாட்டி இருந்தனர். அனைவரும் வெளியேறும் நிலையில் அக்ஷன்பெய்ம் பணியாளர்கள் மாத்திரம் தங்கியிருந்தமையே அவர்கள் கொல்லப்படுவதற்கு காரணமாக அமைந்துள்ளதென கொமின் தயாசிறி குறிப்பிட்டார்.

பிரான்ஸை தலைமையகமாகக் கொண்டியங்கும் அக்ஷன்பெய்ம் நிறுவனம் தனது பணியாளர்களின் பாதுகாப்புத் தொடர்பாக கவனயீனமாக இருந்துவிட்டதாலேயே இந்தப் படுகொலைகள் இடம் பெற்றதாகச் சுட்டிக்காட்டிய இராணுவத்தினரின் சட்டத்தரணி தமது பணியாளர்களைத் தொடர்ந்தும் தங்கியிருக்குமாறு கோரிக்கை விடுத்ததை அக்ஷன் பெயம் நிறுவனம் ஏற்றுக்கொண்டதாகவும் அவர் கூறியிருந்தார்.

இதேவேளை அக்ஷன் பெய்ம் நிறுவனப் பணியாளர்களின் படுகொலைகள் குறித்த விசாரணைகளை மேற்கொள்வதற்கு பிரான்ஸ் நாட்டின் நீதவான் நீதிமன்ற நீதிபதி ஒருவர் இலங்கை வந்துள்ளார். கடந்த ஜுலை மாத ஆரம்பத்தில் இலங்கை வந்த அவர் அக்ஷன் பெய்ம் நிறுவனப் பணியாளர்களின் படுகொலைகள் தொடர்பான தரவுகளைத் திரட்டி வருவதாக அக்ஷன் பெய்ம் நிறுவனம் அறிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (அ-6)



## வடக்கு கிழக்கில் இடம்பெயர்ந்த மக்களுக்காக 204 கோடி செலவு

### தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் இடம்பெயர்ந்த மக்களுக்காக 204 கோடி செலவிடப்பட்டுள்ளதாக ஆளுங்கட்சியின் பிரதம கொறடா தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கைச் சேர்ந்த 11 மாவட்டங்களில் இடம் பெயர்ந்துள்ள 55 ஆயிரத்து 833 குடும்பங்களுக்காக இந்தநிதி செலவிடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் ,கிளிநொச்சி தமுல்லைத்தீவு ,மன்னார் ,வவுனியா , திருகோண மலை . மட்டக்களப்பு ,அம்பாறை . அனுராதபுரம் புத்தளம் மற்றும் பொலநறுவை ஆகிய மாவட்டங்களில் இவ்வாறு குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(அ)

# பட்ஜெட் சொப் நாடகமே அரங்கேற்றப்படுகின்றது

## அனுரகுமார திஸாநாயக்க எம்.பி.

(கொழும்பு)

மொத்த விலையிலேயே சில்லறை விலைக்கும் பொருட்களை கொள்வனவு செய்யலாம் என்று ஆரம்பிக்கப்பட்ட பட்ஜெட் சொப் நாடகமே நாடளாவிய ரீதியில் அரங்கேற்றப் படுகின்றது என்று ஜே.வி.பி. எம்.பி.யான அனுர குமார திஸாநாயக்க தெரிவித்தார். பாராளுமன்றத்தில் வாய் மூலம் கேள்வி நேரத்தின் போது அமைச்சர் பந்துல குண வர்த்தனவிடம் குறுக்குக்கேள்வி எழுப்பி விளக்கம் அளித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலம் கூறியதாவது.

பட்ஜெட் நாடகம் அசாதாரணமாகிவிட்டது. மக்களுக்கு சேவை செய்வதற்காகவும் குறைந்த விலையில் பொருட்களை பெற்றுக் கொள்வதற்குமே இது நாடளாவிய ரீதியில் ஆரம்பிக் கப்பட்டது.

ஆனால் இன்று என்ன நடந்துள்ளது? வரவு- செலவுத் திட்டம் மூலமாக பல்வேறு வரிகள் அறவிடப்பட்டன, அறிமுகப்படுத்தப்பட்டன. பின்னரும் அறவிடுவதற்காக பதிய வரிகள் கொண்டு வரப்பட்டன. அதற்கு நாம் இட மளிக்காது எதிர்த்து நின்றோம். (அ-6)

# புலிகளின் வலிந்த தாக்குதல்களால் படையினருக்கு கடும் இழப்பு

## லக்பிம வார ஏடு தகவல்

(கொழும்பு)

படையினரின் முன் நகர்வுகளுக்கு எதிராக எதிர்த்தாக்குதல்களை நடத்திவந்த தமிழீழ விடுதலைப்புலிகள் தற்போது வலிந்த தாக்குதல்களை ஆரம்பித்துள்ளனர். இது படையினருக்கு கணிசமான இழப்புகளை ஏற்படுத்தி வருகின்றது. என்று கொழும்பிலிருந்து வெளிவரும் லக்பிம ஆங்கில வார ஏடு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த ஏட்டின் பாதுகாப்பு ஆய்வுப்பத்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளவற்றின் முக்கிய பகுதிகள்.

படையினரின் பல முன்நகர்வுகளுக்கு எதிர்ப்பை மட்டும் காட்டிவந்த புலிகள் கடந்த முதலாம் திகதியிலிருந்து கடுமையான எதிர்த்தாக்குதல்களையும் மேற்கொள்ள ஆரம்பித்துள்ளனர். இது படையினருக்கு பெரும் இழப்புக்களை ஏற்படுத்தி வருகின்றது.

மல்லாவிக்கு தென்புறமாக தமது நிலைகளைபலப்படுத்திவந்த படையினரின் 57ஆவது தாக்குதல் படையணி மீது விடுதலைப் புலிகளின் இம்ரான் -பாண்டியன் மற்றும் சாள்ஸ் அன்ரனி சிறப்பு படையணிகள் கடுமையான தாக்குதலை நடத்தின.

பதுங்குழிகளை அமைத்துக்கொண்டிருந்த படையினர் மீது விடுதலைப்புலிகளின் சிறப்பு அணிகள் திடீர் தாக்குதலை தொடுத்திருந்தன. மல்லாவி மற்றும் துணுக்காய் பகுதிகளில் விடுதலைப்புலிகள் தமது நிலைகளை பலப்படுத்தி வருவதாக இரு வாரங்களுக்கு முன்னர் படையினரின் புலனாய்வுத்துறை தெரிவித்திருந்த நிலையில் இத் தாக்குதல்கள் இடம் பெற்றன.

இம்மோதல்களின் போது காயமடைந்த படையினரை மீட்டுவரச் சென்ற படையினரின் வாகனத்தின் மீதும் விடுதலைப்புலிகள் பதுங்கி தாக்குதலை நடத்தினர்.

வாகனத்தின் மீது விடுதலைப் புலிகள் நடத்திய ஆர்பிஜி தாக்குதலில் அதன் சாரதியும் அதில் பயணித்த இரு படையினரும் கொல்லப்பட்டனர் மோதல்களில் 20 படையினர் கொல்லப்பட்டதுடன் 5 பேர் காணாமல் போயுள்ளதாகவும் 50க்கும் அதிகமான படையினர் காயமடைந்துள்ளதாகவும் படைத்தரப்பு தெரிவித்திருந்தது.

இதனிடையே கடந்த செவ்வாய்க்கிழமை கல்விளான் பகுதியிலும் நிலைகொண் டிருந்த படையினர் மீது விடுதலைப்புலிகள் வலிந்த தாக்குதலை நடத்தினர்

இதில் 7 படையினர் கொல்லப்பட்டதுடன் ஒருவர் காணாமல் போயிருந்தார். கல்விளான் துணுக்காய் பகுதிக்கு 2 கி.மீ. தென்புறமாகவுள்ளது குறிப்பிடத்தக்கது.

படைத்தரப்பு அதிக இழப்புக்களைச் சந்தித்ததனைத் தொடர்ந்து படையினர் தற்போது இரு பல்குழல் உந்துகணை செலுத்திகளை அப்பகுதிக்கு நகர்த்தியுள்ளதுடன் கடுமையான தாக்குதல்களையும் மேற்கொண்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் வலிந்த தாக்குதல்களை தடுப்பதற்காக படையினர் தற்போது பல்குழல் உந்துகணை செலுத்திகளை பெருமளவில் பயன்படுத்தி வருகின்றனர்.

மன்னாரின் வடக்குப் புறமாக வெள்ளாங்குளம் நோக்கி நகர்ந்துள்ள படையினரின் 58ஆவது படையணியினர் 25 கி.மீ. தொலைவில் உள்ள பூநகரியை கைப்பற்றும் நோக்கத்துடன் நகர்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விடுதலைப்புலிகளின் பீரங்கி நிலைகளை கைப்பற்றும் முகமாகவே படையினர் பூநகரி நோக்கிய நகர்வை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது.

மேலும் வன்னியின் முன்னணி கள முனைகளில் இருந்து மகளிர் படையணிகளை விலக்கிக்கொண்ட விடுதலைப்புலிகள் அங்கு தமது சிறப்பு படையணிகளான சாள்ஸ் அன்ரனி மற்றும் இம்ரான்- பாண்டியன் படையணிகளை நகர்த்தியுள்ளனர்.

மல்லாவி மற்றும் துணுக்காய் பகுதிகளில் 700க்கும் அதிகமான சிறப்பு படையினரை விடுதலைப்புலிகள் நகர்த்தியுள்ளனர் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-6)

## அரசைக் கவிழ்க்கும் நோக்குடன் ஜே.வி.பி.செயற்படுகிறது

### சுகாதார அமைச்சர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கத்தை கவிழ்க்கும் நோக்குடன் ஜே.வி.பி செயற்படுவதாக சுகாதார அமைச்சர் நிமல் சிறி பால டி சில்வா தெரிவித்துள்ளார் இரத்தினபுரிமாவட்டத்திலுள்ள கொலன்னவில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இந்த கருத்தினை தெரிவித்தார்.

ஜே.வி.பியினரின் இந்த முயற்சியில் அவர்கள் எந்த நிலையிலும் வெற்றி பெறப் போவதில்லை எனவும் அமைச்சர் தனது உரையில் தெரிவித்தார் கொலன்ன மருத்துவ மனைக்கான மருத்துவ உபகரணத் தொகுதி ஒன்றையும் சுகாதார அமைச்சர் கையளித்தார்.

(அ-6)

> பசித்தவனுக்குச் சமாதானம் கூறமுடியாது. ஏனெனில் பசிக்குக் காதுகள் கிடையாது.
>
> -கிரீஸ்

வலம்புரி

# ஐ.நா.சபையின் பொறுப்பற்ற கதை

வன்னிப் பெருநிலப்பரப்பில் இடம்பெயர்ந்து அல்லலுறும் மக்களுக்கு உதவி வழங்க இலங்கை அரசும் படையினரும் தடை விதிப்பதாக அகதிகளுக்கான ஐ.நா.சபையின் உயர் அதிகாரி ஒருவர் ஜெனீவாவில் வைத்துத் தெரிவித்துள்ளார்.

வன்னிப்பெருநிலப்பரப்பில் மூண்டுள்ள யுத்தம் காரணமாக பல்லாயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து உதவிகளற்ற நிலையில் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்நிலையில் அவர்களுக்கான மனிதாபிமானப் பணிகளை முன்னெடுக்கும் தார்மீகப் பொறுப்பு ஐ.நா.சபை உள்ளிட்ட உலக மனித நேய அமைப்புக்களுக்கு உண்டு.

இருந்தும் அந்த அமைப்புக்கள் வன்னியில் இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவி வழங்குவதில் கரிசனையற்றவர்களாக, இருக்கின்றனர்.

இது பாதிக்கப்பட்ட மக்களுக்குச் செய்யும் பெரும் துரோகத்தனமாகும். மனித நேய அமைப்புக்கள் தங்களுடைய தார்மீகக் கடமையை செய்வதில் ஒருபோதும் பின்னிற்கலாகாது.

யார் எந்தப் பொறுப்பை செய்வதாக இருக்கிறார்களோ அவர்கள் தங்கள் கடமைகளைச் சரிவர-நேர்த்தியாக செய்தாகவேண்டும். இதுவே கடமையும் தார்மீகப் பொறுப்புமாகும்.

ஆனால் அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் சபையின் உயர்ஸ்தானிகராலயப் பேச்சாளர், வன்னியில் இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவுவதற்கு இலங்கை அரசும் படையினரும் தடை விதித்து வருவதாகக் கூறியுள்ளார்.

அப்படியானால் அரசு -படையினர் தடை விதித்துவிட்டார்கள் என்பதற்காக இடம்பெயர்ந்த அப்பாவிப் பொதுமக்கள் பட்டினிச்சாவை - பேரவலத்தை சந்திப்பதா? அதற்கு ஐ.நா.சபை அனுமதிப்பதா? என்ற கேள்விகள் எழுவது தவிர்க்க முடியாததே.

ஆக, இடர்படும் பொதுமக்களுக்கு உதவி வழங்குவதை யார் தடுத்தாலும் அது மிகப் பெரும் ஜனநாயக விரோதமும் மனித நேயமற்ற செயலுமாகும்.

எனவே இத்தகைய மனித நேயமற்ற செயலைப் புரிவோருக்கு எதிராக ஐ.நா.சபை எடுக்கக் கூடிய நடவடிக்கை எதுவோ அதனை அந்த அமைப்பு எடுத்தாக வேண்டும்.

வெறுமனே இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவி வழங்க அரசு அனுமதி வழங்கவில்லை என மொட்டையாகக் கூறிவிட்டு உலகின் அதியுயர் பொது அமைப்பான ஐ.நா.சபை மௌனம் காப்பதென்பது அந்த அமைப்பின் பொறுப்பற்ற செயலாகும்.

ஆகவே இது விடயத்தில் ஐ.நா.சபை மனித நேயத்துடன் தனது கடமையைச் செய்தாக வேண்டும்.

# வன்னியிலுள்ள தன்னார்வ நிறுவனங்களின் வாகனங்களை அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குக் கொண்டு வர முயற்சி

(கொழும்பு)

சர்வதேச தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் வன்னியிலும் கட்டுப்பாடற்ற பிரதேசங்களிலும் கொண்டுள்ள அசையும் அசையா சொத்துக்கள் தொடர்பாக வெளிப்படுத்த வேண்டும் என அவசர சேவை முகாமைத்துவ அமைச்சு உத்தரவிட்டுள்ளது. அவை தமிழீழ விடுதலைப்புலிகளின் கைகளுக்குச் செல்வதைத் தடுப்பதற்காகவே இந்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சுக்குக் கிடைத்த தகவலின்படி இதுவரை நோர்வேஜிய மக்கள் நிதியம் நிறுவனத்தின் விசேட தேவைக்கான சுமார் 40 வாகனங்கள் தமிழீழ விடுதலைப்புலிகள் வசம் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வாகனங்கள் நடைமுறைப் போர்ச் சூழ்நிலையில் மனிதாபிமான நடவடிக்கைகளுக்குப் பதிலாக இராணுவ முனைப்புகளுக்காகப் பயன்படுத்தப்படலாம் என அமைச்சு எண்ணம் கொண்டுள்ளது.

எனவே அவற்றை மீண்டும் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குக் கொண்டு வரும் முயற்சியில் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. இதேவேளை வன்னியில் தமது வாகனங்களையும் படையினரின் தாக்குதல்களில் இருந்து தப்ப வைப்பதற்காகத் தமிழீழ விடுதலைப்புலிகள் தன்னார்வ நிறுவன வாகனங்களை ஒத்த வெள்ளை நிற வாகனங்களாக மாற்றியுள்ளதாகக் கொழும்பிலிருந்து வெளியாகும் நேசன் செய்தித் தாள் குறிப்பிட்டுள்ளது. (அ-6)

# க.பொ.த. (சா/த) பரீட்சையில் கணித பாட பெறுபேற்றை 7 வீதத்தால் அதிகரிக்க செயற்றிட்டம்

(கொழும்பு)

க.பொ.த. (சா/த) பரீட்சையில் கணிதப் பாடப் பெறுபேற்றை 7 வீதத்தால் அதிகரிக்க விசேட செயற்திட்டம் ஒன்றை கல்வி அமைச்சின் கணித விஞ்ஞானப் பிரிவு நடைமுறைப்படுத்தவுள்ளது.

இது தொடர்பான செயலமர்வு கல்வி அமைச்சின் கணித விஞ்ஞான பிரதிக் கல்விப் பணிப்பாளர் விஜயதாசகேவ விதாரண தலைமையில் அண்மையில் நடைபெற்றது. நாடளாவிய ரீதியில் வலயக் கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் இதில் கலந்து கொண்டனர்.

அங்கு எடுக்கப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு;

கணித உபகரணங்கள் தயாரித்தலுக்காக வலய மட்டத்தில் 5 பேர் கொண்ட குழு தெரிவு செய்யப்பட்டது. கணித பாட ஆலோசகர்களும் மற்றும் வளவாளர்களின் திறன்விருத்தி தொடர்பாக வேலைத் திட்டம் உருவாக்கப்பட்டது. மாதிரி கணித கூடம் அமைக்க வலயப் பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டன.

க.பொ.த. (சா/த) 2007 கணித பாட அடைவு மட்டப் பகுப்பாய்வு பெறப்பட்டது. (அ-6)

# இலங்கையின் கல்வி மேம்பாட்டுக்கு இஸ்ரேலிய அரசு நிதி உதவி

இலங்கையின் உயர் கல்வித் துறையை மேம்படுத்துவதற்காக இஸ்ரேலிய அரசாங்கம் உதவிகளை வழங்க முன்வந்துள்ளது.

நவீன உலகில் ஏற்பட்டு வரும் விஞ்ஞான தொழில் நுட்ப மாற்றங்களுக்கு அமைய உயர் கல்வித் துறையையும்மாற்றி அமைக்க வேண்டிய தேவையை வலியுறுத்தியுள்ள இஸ்ரேலிய அரசாங்கம் இது குறித்துத் தேவையான சகல உதவிகளையும் இலங்கை அரசாங்கத்திற்கு வழங்குவதாக உறுதியளித்துள்ளது.

இலங்கைக்கான இஸ்ரேலியத் தூதுவர் மார்க் ஸொபர் அண்மையில் உயர் கல்வி அமைச்சர் பேராசிரியர் விஸ்வ வர்ணபாலவை உயர் கல்வி அமைச்சில் வைத்துச் சந்தித்த போதே இஸ்ரேலிய தூதுவர் இந்த விடயம் குறித்துத் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகங்களின் கல்விச் செயற்பாடுகளை மறு சீரமைப்பதற்காகத் தேவையான நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை இஸ்ரேலிய அரசாங்கம் வழங்கத் தயார் எனவும் இஸ்ரேலியத் தூதுவர் இதன்போது மேலும் தெரிவித்துள்ளார். (அ-5)

# கலாநிதிப் பட்டம் வழங்கும்போது உரிய தகுதி கவனத்தில் கொள்ளப்படும்

## அமைச்சர் டியு.குணசேகர தெரிவிப்பு

(கொழும்பு)

கலாநிதிப் பட்டங்களுக்காக எதிர்காலத்தில் நபர்களைச் சிபார்சு செய்கையில் உரிய தகுதி அடிப்படையில் அவற்றை வழங்குவதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. தகுதியற்ற நபர்களுக்குக் கலாநிதிப் பட்டம் வழங்குவதனால் அந்தப் பதவிக்கான கௌரவம் பாதிக்கப்படுவதாக அரசியல் யாப்பு விவகார அமைச்சர் டியு.குணசேக்ர தெரிவித்தார்.

இதற்கமைய கலாநிதிப் பட்டம் வழங்கப்படும்போது அவை தகுதியானவர்களுக்குக் கிடைக்கின்றதா என்பது குறித்து ஆராய்வதற்கான பொறுப்பு கல்வி அமைச்சர்கள் இருவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

விசேடமாக கலாநிதி மற்றும் பேராசிரியர் போன்ற பதவிகளின் பெறுமதியை அறியாமல் பணத்திற்குப் பெற்றுக் கொள்பவர்களும் உள்ளனர். இந்த விடயம் அந்தப் பதவிகளை வகிக்கும் தகுதியுடையவர்களுக்கும் பாரிய அகௌரவமாகும். இது தொடர்பாக புத்திஜீவிகளுக்கும் பல்கலைக்கழகக் கட்டமைப்பிலுள்ள ஏனையவர்களுக்கும் விடயங்கள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)

# அவசர திருத்த வேலைகளுக்காக சகல தேசிய பாடசாலைகளுக்கும் நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

கல்வி அமைச்சின் கீழ் இயங்கி வரும் தேசிய பாடசாலைகளில் அவசர திருத்த வேலைகளை மேற்கொள்வதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகள் பாடசாலைகளுக்கு நேரடியாக வழங்கப்பட இருக்கின்றன.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் மூலம் திருத்த வேலைகளை மேற்கொள்வதற்கு வசதியாக நாடளாவிய ரீதியில் சகல தேசிய பாடசாலைகளுக்கும் தலா இரண்டு இலட்சம் ரூபாய் வீதம் வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சின் தேசிய பாடசாலைகளுக்குப் பொறுப்பான பணிப்பாளர் சிறிலால் தெரிவித்துள்ளார்.

தற்போது ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடிகள் மற்றும் கட்டடப் பொருள்களின் விலையேற்றம் காரணமாகப் பாடசாலை திருத்த வேலைகளுக்குத் தேவையான நிதியுதவிகளை வழங்குவதில் சிரமங்கள் எதிர்நோக்கப்பட்டு வருகின்றன.

இதனைக் கருத்தில் கொண்டு குறைந்த செலவில் கூடிய தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களுக்கு நேரடியாக நிதி ஒதுக்கீடுகளை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

நிதிப் பிரமாணங்களுக்கு அமைவாகவும் வலய தொழில் நுட்ப ஆலோசனைகளுக்குஏற்பவும் செலவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

## தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும் 74

ஓலைச் சுவடி

### கற்பூரம் ஏற்றுவது பயனளிக்குமா?

பொதுவாக பூஜைகளுக்கு கற்பூரம் ஏற்றுவது வழக்கம். இதையும் மூட நம்பிக்கையாகவே பலரும் கருதி வருகின்றனர். பலரும் இதை பூஜையின் பாகமாக இறையருளுக்காக செய்வதாகக் கருதுகின்றனர்.

ஆனால் கற்பூரம், சாம்பிராணி முதலியவை ஏற்றும் போது அதன் புகை சென்று சேரும் இடம் எல்லாம் பொசிடிவ் சக்தி பரவுகின்றது. மேலும் சூழலிலுள்ள விஷ அணுக்களை அழிக்கவும் இந்தப் புகைக்குச் சக்தி உண்டு.

இதனால் இறையருளும் கிடைக்கப் பெறும். இந்த உண்மைகளை அன்றே அறிந்திருந்தனர் நம் முன்னோர்கள்.

# நேரிடையாக கைகோர்த்துள்ள இந்தியாவும் தீவிரமாக்கப்படும் படை நகர்வுகளும்

போரை நோக்கி வளர்த்துவிடப்பட்ட தென்னிலங்கை மக்களுக்கு தொடர்ச்சியான வெற்றி செய்திகளை கொடுக்க வேண்டிய கட்டாயத்தில் அரசாங்கம் உள்ளது. எனவே வன்னி மீது மேற்கொள்ளப்படும் படை நடவடிக்கை தொடர்பாக வெளிவரும் அறிக்கைகளில் விடுதலைப்புலிகள் பெருமளவில் கொல்லப்படுவதாகவும் அவர்களின் பதுங்கு குழிகள் தொடர்ச்சியாக கைப்பற்றப்படுவதாகவும் அரசாங்கம் தெரிவித்து வருகின்றது.

ஆனால் விடுதலைப்புலிகள் அறிவித்த போர்நிறுத்த காலத்தில் அதாவது யூலை 26 தொடக்கம் ஆகஸ்ட் 4 ஆம் திகதி வரையில் மேற்கொள்ளப்பட்ட படை நடவடிக்கைகளில் வவுனிக்குளம் மற்றும் கல்விளான் பகுதிகளில் நடைபெற்ற மோதல்களில் இராணுவத்தின் வலிந்த தாக்குதல் படையணிகளில் ஒன்றான 57ஆவது படையணி கணிசமான இழப்புகளைச் சந்தித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

போர்நிறுத்த காலத்தில் மல்லாவி மற்றும் துணுக்காய் பகுதிகளை நோக்கியே அரசாங்கம் தனது படைநடவடிக்கைகளை செறிவாக்கியிருந்தது அதற்கேற்ப பெரும் சூடு வலுவுடன் 57ஆவது படையணியின் 1வது, 2வது மற்றும்3ஆவது பிரிகேட் படையணிகள் சிறப்புப்படை கொமாண்டாக்களின் துணையுடன் தமது படை நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியிருந்தன. மல்லாவிக்கு தென் கிழக்காக உள்ள வவுனிக்குளம் நோக்கி நகர்ந்த 57ஆவது படையணியின் இரண்டாவது பிரிகேட்டின் பிரதான இலக்கு மல்லாவியைநோக்கி நகர்வதாகும். இந்தப் படையணியின் 3ஆவது கஜபா றெஜிமென்ட் 7ஆவது சிலோன் இலகு காலாட்படை 8ஆவது கஜாபா றெஜிமென்ட், 4ஆவது கெமுனுவோச் ஆகிய படையணிகளே வவுனிக்குளம் நோக்கிய நகர்வை மேற்கொண்டிருந்தனர்.

மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ்சின் வழி நடத்தலின் மேற்கொள்ளப்பட்ட இந்தப் படை நடவடிக்கையில் கடந்த மாதம் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை வவுனிக்குளம் நோக்கி நகர்ந்த 57ஆவது படையணியின் 2 ஆவது பிரிகேட் படையணியைச் சேர்ந்த 4ஆவது கெமுவோச் படையணியினர் லெப்.கேணல் வெலிகல தலைமையில் கடந்த 1ஆம் திகதி வெள்ளிக்கிழமை மல்லாவிக்கு தென்கிழக்காக உள்ள வவுனிக்குளம், தாழையடி ஆகிய பகுதிகளினூடாக மல்லாவி நோக்கி நகர்ந்த போது விடுதலைப்புலிகள் கடுமையான எதிர்த்தாக்குதலை தொடுத்திருந்தனர்.

கேணல் பானுவின் வழிநடத்தலில் களமிறங்கிய சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி 57ஆவது படையணியின் கெமுவோச் மற்றும் கஜபா றெஜிமென்ட் பற்றலியன் துருப்புகளை முற்றுகையிட்டு தாக்கத் தொடங்கின. கடுமையான சமர் ஆரம்பமாகியபோது லெப். கேணல் குட்டிசிறி மோட்டார் படையணி 120 மி.மீ. மோட்டார்கள், 81மி.மீ. மோட்டார்கள் மூலம் ஆதரவு சூடுகளை வழங்க மோதல் உக்கிரமடைந்தது.

இதன்போது விடுதலைப்புலிகள் மாங்குளத்திற்கு வடக்காகவும் கிளிநொச்சி பூநகரி வீதிக்கு தெற்காகவும் 122மி.மீ. மற்றும் 130 மி.மீ. பீரங்கிகளை ஒருங்கிணைத்து தாக்குதலை நடத்தியதாகவும் படைத்தரப்பு தெரிவித்துள்ளது. இராணுவமும் மோட்டார்கள், கனரக பீரங்கிகள் 122 மி.மீ. பல்குழல் உந்துகணை செலுத்திகளின் கடுமையான தாக்குதலுடன் எம். ஐ-24 தாக்குதல் உலங்கு வானூர்திகள் மூன்றையும் தாக்குதலில் இணைத்திருந்தது. 13 மணி நேரம் நீடித்த சமரில் படைத்தரப்பு கடுமையான இழப்புகளை சந்தித்திருந்தது. இந்த சமரில்12 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் 20க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்ததாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்திருந்தது.

எனினும் இந்த மோதல்களில் 30க்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் 60ற்கு மேற்பட்டோர் படுகாயமடைந்திருந்ததாக விடுதலைப்புலிகள் தெரிவித்திருந்தனர். படைத்தரப்பின் தகவல்களின்படி 21 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் 5 படையினர் காணாமல் போயுள்ளதாகவும் 65க்கு மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது 60மி.மீ. மோட்டார் ஆர்.பி.ஜி இலகு இயந்திர துப்பாக்கி உட்பட பெருமளவான ஆயுதங்களையும் லாண்ட் குரூசர் வாகனத்தையும் படையினரின் 3 சடலங்களையும் விடுதலைப்புலிகள் கைப்பற்றியுள்ளதாக தெரிவித்திருந்தனர்.

விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்ட 3 சடலங்களும் காணாமல் போன படையினரின் சடலங்களாக இருக்கலாம் என தெரிவித்துள்ள படைத்தரப்பு ஆரம்ப கட்ட மோதல்களின் போது காயமடைந்த படையினரை ஏற்றிவர சென்ற லாண்ட்குரூசர் வாகனம் விடுதலைப்புலிகளின் சிறப்புப் படையினரின் பதுங்கித் தாக்குதல்களுக்கு இலக்காகியுள்ளதாகவும் இதன்போது வாகனத்தின் சாரதியும் அதில் பயணித்த இரு இராணுவத்தினரும் கொல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

அண்மைக் காலமாக 57ஆவது படையணியின் துருப்புக்கள் பெருமளவில் விடுதலைப்புலிகளை அழித்து வருவதாக படைத்தரப்பு மார்தட்டி வந்தவேளையில் அந்தப் படையணி கடுமையான எதிர்த்தாக்குதலை எதிர்கொண்டதுடன் பெரும் இழப்பையும் சந்தித்துள்ளது.



2007ஆம் ஆண்டு ஜூன் மாதம் விளாத்திக்குளம் மற்றும் முள்ளிக்குளம் பகுதிகளில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட ஊடறுப்புத் தாக்குதலில் இந்த படையணி அதிக இழப்புகளை சந்தித்திருந்தது. அதனைத் தொடர்ந்து 57ஆவது படையணியின் கட்டளைத்தளபதி பிரிகேடியர் சுமித்மானவடு பதவிநீக்கம் செய்யப்பட்டதுடன் பிரிகேடியர் ஜெகத் டயஸ் நியமிக்கப்பட்டிருந்தார்.

பின்னர் அவர் மேஜர் ஜெனரலாக பதவி உயர்த்தப்பட்டிருந்தார். பதவி உயர்வு பெற்ற மேஜர் ஜெனரல் டயஸின் படையினர் படை நடவடிக்கைகளை முதன்மைப்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

இந்த மோதலின்போது விடுதலைப்புலிகளின் சிறப்புப் படையினர் இராணுவத்தின் உள் நிலைகளுக்குள் ஊடுருவியே உதவிக்கு விரைந்த லாண்ட் குரூசரை கைப்பற்றியுள்ளதாக படைத்தரப்பு தெரிவித்துள்ளது. இதனிடையே கடந்த செவ்வாய்க்கிழமை துணுக்காய் பகுதிக்கு தென்மேற்காக 2 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கல்விளான் பகுதியிலும் மேற்காக உள்ள வெள்ளாங்குளம் பகுதியிலும் கடுமையான மோதல்கள் நடைபெற்றுள்ளன. கல்விளான் பகுதியிலும் முன்னகர்வில் ஈடுபட்டிருந்த 57ஆவது படையினர் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் 7 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளதாகவும் ஒருவர் காணாமல் போயுள்ளதாகவும் பெருமளவான படையினர் காயமடைந்துள்ளதாகவும் படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

எனினும் இந்த மோதல்களில் படையினரின் சடலம் ஒன்றையும் ஆயுதங்களையும் கைப்பற்றியுள்ளதாகவும் 10 படையினர் கொல்லப்பட்டதாகவும் 19க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகவும் விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் வெள்ளாங்குளம் பகுதியில் அதே நாளில் 58ஆவது படையணியுடன் நடைபெற்ற மோதல்களின்போது 10க்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டதாகவும் பெருமளவானோர் காயமடைந்ததுடன் இரு படையினரின் சடலங்களையும் ஒரு தொகுதி ஆயுததளபாடங்களையும் மீட்டுள்ளதாகவும் விடுதலைப்புலிகள் தெரிவித்திருந்தனர்.

மணலாற்றில் படை நடவடிக்கையை மேற்கொண்டுவரும் 59ஆவது படையணியின் நடவடிக்கைகள் மிகவும் மந்த நிலையை அடைந்துள்ளநிலையில் மன்னார்-வவுனியா அச்சில் வடகிழக்காகவும் வடமேற்காகவும் நடைபெற்றுவரும் படைத்தரப்பு அதிக சிரத்தை காட்டிவருவது கவனிக்கத்தக்கது.

வன்னி படைநடவடிக்கையை பொறுத்தவரையில் ஏ-9 பாதையில் மையப்பகுதியை குறிவைத்து 57ஆவது படையணி நகர்வில் ஈடுபட ஏ-32 பாதையை குறிவைத்து 58ஆவது படையணி நகர்வில் ஈடுபட்டு வருகின்றது. இதனால் இரு முனைகளால் சமாந்தரமாக நகர்வில் ஈடுபட்டுவரும் இந்தப் படையணிகள் இடைநடுவில் பெரும் நிலப்பரப்புகளை விழுங்கி வருகின்றன. ஆனால் அவற்றின் கேந்திர முக்கியத்துவம் என்ன என்பதுதான் தற்போதைய முக்கிய கேள்வி.

இராணுவத்தைப் பொறுத்தவரையில் அண்மையில் இஸ்லோவாக்கியாவில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட 10 ஆயிரம் பல்குழல் உந்துகணை செலுத்திகளுக்கான 122 மி.மீ உந்துகணைகளின் உதவியுடன் செறிவான சூட்டாதரவை பயன்படுத்தி வருவதுடன் எம்.ஐ 24 மற்றும் எம்.ஐ 35 ரக தாக்குதல் உலங்கு வானூர்திகளின் துணையுடன் படையினர் முன்னகர்ந்துள்ள பகுதிகளுக்கு அண்மையாக வான்தாக்குதலையும் மேற்கொண்டு வருகின்றது.

விடுதலைப்புலிகளின் ஆழமான பகுதிகள் மீது மிக் -27 மற்றும் கிபிர் அதிவேக தாக்குதல் விமானங்கள் மூலம் தாக்குதல்களை நடத்திவரும் படைத்தரப்பு முன்னணி அரங்குகளுக்கு அண்மையாக தாக்குதல் உலங்கு வானூர்திகளை பயன்படுத்தி வருகின்றது.

கடந்த 5ஆம் திகதி கல்விளான் பகுதியில் நடைபெற்ற மோதல்களின் போதும் படைத்தரப்பு 2டாட்டா டிரக் வண்டிகளின் மூலம் பல 40 குழல்களைக் கொண்ட பல்குழல் உந்துகணை செலுத்திகளில் இருந்து ஒரு தடவையில் 80 உந்துகணைகள் வீதம் சரமாரியான தாக்குதலை மேற்கொண்டதுடன். இரு எம். ஐ.-24 தாக்குதல் உலங்கு வானூர்திகளையும் தாக்குதலில் பயன்படுத்தி இருந்தது.

தற்போதைய படை நடவடிக்கையில் படைத்தரப்பு பயன்படுத்தி வரும் உத்திகளுக்கு அதிக படைவளம், அதிக சூடு வளங்கள் தேவை. படையினரின் தேவைகளை ஈடுசெய்வதற்காக தப்பியோடிய படையினருக்கான பொது மன்னிப்புக்களையும் புதிதாக படையினரை சேர்ப்பதற்கான நடவடிக்கைகளையும் முடுக்கி விட்டுள்ள அரசு தனது ஆயுத தேவைகளை பல்வேறு நாடுகளிடம் இருந்து பெற்று வந்திருந்தது.

அரசாங்கம் தனது ஆயுத தேவைகளுக்கு இந்துசமுத்திர பிராந்திய பூகோள அரசியலை தனக்கு சாதகமாகப் பயன்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. பாகிஸ்தான், சீனா என தனது ஆயுத தேவைகளை நிறைவு செய்து வந்த இலங்கை அரசாங்கம் இந்தியாவை தனக்கு சாதகமான ஒரு நிலைக்கு மீண்டும் இழுத்துள்ளது.

இதற்கு அமைய இலங்கையில் நடைபெற்ற சார்க் மாநாட்டை முன்னின்று நடத்திக் கொடுத்த இந்தியா தற்போது இலங்கைக்கான தனது படைத்துறை உதவிகளையும் அதிகரித்துள்ளது. இலங்கை அரசு கொள்வனவு செய்ய தீர்மானித்துள்ள மிக் 29 ரக தாக்குதல் விமானங்களுக்கான தொழில் நுட்ப மற்றும் பயிற்சி உதவிகளை வழங்க முன்னர் முன்வந்த இந்தியா தற்போது இலங்கை வான் படையினரை தரம் உயர்த்தும் நடவடிக்கைகளை முன்னின்று மேற்கொண்டு வருகிறது.

இலங்கை வான்படையினரின் வான் கலங்களை தரம் உயர்த்தும் நடவடிக்கைகளை இந்திய அரசின் அனுசரணையுடன் இந்திய வான்படையும் இந்தோ-ரஷ்யன் ஏவியேசன் லிமிட்டெட் மேற்கொண்டு வருகின்றன. இந்திய அரசு இலங்கை வான்படையின் எம்.ஐ.-17 வி, எம்.ஐ-24, எம்.ஐ-35(இரு எம்.ஐ.24 வகை உலங்கு வானூர்தியின் ஏற்றுமதி வடிவம்) உக்ரேன் தயாரிப்பான மிக் 27 டி மற்றும் மிக் 27 யுபி(பயிற்சி விமானம்) ஆகியவற்றை தரம் உயர்த்துவுதற்கு முன் வந்துள்ளது. மேலும் இரானுடன் இலங்கை அரசு கொண்டுள்ள புதிய உறவுகளால் சினமடைந்துள்ள இஸ்ரேல், இலங்கை ஆயுத விநியோகங்களை தற்காலிகமாக கட்டுப்படுத்துவதற்கு முயன்று வருகையில் இஸ்ரேலிய தயாரிப்பான கிபிர் தாக்குதல் விமானங் களை பராமரிக்கும் பணிகளை இந்தியா மேற்கொள்ள தீர்மானித்துள்ளது.

கிபிர் விமானங்களுக்கான சூட்டு கட்டுப்பாட்டு ராடர்களை பொருத்தும் பணிகள் தொடர்பாக இலங்கை அரசு இஸ்ரேலுடன் பேச்சுக்களில் ஈடுபட்டிருந்த போது இந்தியா வின் இந்துஸ்தான் ஏரோ நியூற்றிக்கல் நிறுவனம் அந்த ராடர்களை இலங்கையின் கிபீர் விமானங்களுக்கு விரைவாக பொருத்தி கொடுத்துள்ளது. அதற்கான செலவுகளையும் இந்திய அரசு ஏற்றுக்கொண்டுள்ளது அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

இந்த ராடர்கள் வானில் இருந்து வானுக்கும் வானில் இருந்து தரைக்கும் மற்றும் கடலுக்குமான தாக்கு திறனில் முன்னைய ராடர்களை விட மிகவும் தரமானது. மேலும் இந்த வருட இறுதிப்பகுதியில் இலங்கை வான் படையினரின் இரு கிபீர் -சி.7 ஒரு கிபீர் சி.2, 1கிபீர் ரி.சி.2(பயிற்சி விமானம்) என்பனவும் புனரமைப்பு மற்றும் தரம் உயர்த்தும் பணிகளுக்காக இந்தியாவுக்கு கொண்டு செல்லப்படவுள்ளன.

இந்திய நிறுவனங்கள் இலங்கை வான் படையின் 6 எம்.ஐ-24 ரக தாக்குதல் உலங்கு வானூர்திகளையும் இரவு நேர தாக்குதல் வலிமையுள்ளதாக மாற்றி கொடுத்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இவை தவிர 2006 ஆம் ஆண்டு இரு எம்.ஐ.17 உலங்கு வானூர்திகளையும் இந்திய அரசு இலங்கை அரசுக்கு வழங்கியிருந்தது. அவற்றின் ஒன்று வான் புலிகளின் தாக்குதலில் சேதமடைந்தது குறிப்பிடத்தக்கது.

எனினும் தற்போது இந்திய அரசு இலங்கை அரசுடன் நேரடியாக கைகோர்த்துள்ள நிலையில் இலங்கை அரசு தனது படைத்துறை உத

**வேல்ஸிலிருந்து அருஷ்**

விகளை இந்தியாவிடம் இருந்து பெருமளவில் பெற்றுக்கொள்வதுடன் போரையும் தீவிரப் படுத்தி வருகின்றது. அதாவது இலங்கையில் உக்கிரமடைந்து வரும் மோதல்கள் அதனால் கொல்லப்படும் பெருமளவான அப்பாவிப் பொது மக்களின் பின்னணியில் உலகின் மிகப் பெரும் ஜனநாயக நாடு என தன்னைத் தானே தம்பட்டம் அடித்துவரும் இந்தியா தீவிர மாக செயல்படுவது உலகெங்கும் பரந்து காணும் தமிழ் மக்களை ஆழ்ந்த அதிர்ச்சியில் தள்ளியுள்ளது.

இந்த நிலையில் எந்தச் சூழ்நிலைகளையும் எதிர்கொள்ளும் ஒரு நெருக்கடியான கட்டத்தை தமிழினம் அடைந்துள்ளது என்பதே தற்போது பொருத்தமானது. ஆனால் அனைத்துலகத்திலும் தமிழ் நாட்டிலும் ஈழத் தமிழ் மக்களுக்கான ஆதரவுகள் பெருகி வருவதாக கருத்துக் கண்காணிப்புகளும் அங்கு நடைபெறும் பேரணிகளும் கட்டியம் கூறி வருகையில் விடுதலைப்புலிகளை ஒரு பலவீனமான அமைப்பாக சித்திரிக்க அரசாங்கம் முயன்று வருகின்றது.

# அமெரிக்க நீச்சல் வீரர் பெல்ப்ஸ் புதிய சாதனை

ஒலிம்பிக் 400 மீற்றர் தனிநபர் மெட்லே பிரிவில்,அமெரிக்க நீச்சல் வீரர் மைக்கல் பெல்ப்ஸ் புதிய உலக சாதனை படைத்தார்.

சீனத் தலைநகர் பீஜிங்கில் 29-வது ஒலிம்பிக் போட்டிகள் நடக்கின்றது.

400 மீற்றர் தனிநபர் மெட்லே பிரிவு நீச்சல் போட்டி நேற்று முன்தினம் நடந்தது.

கடந்த ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் (2004) ஆறு பிரிவுகளில் தங்கம் வென்ற அமெரிக்காவின் மைக்கல் பெல்ப்ஸ், மெட்லே பிரிவில் அசத்தினார்.

போட்டித் தூரத்தை 4 நிமிடம் 3.84 விநாடிகளில் கடந்த இவர் நீச்சல் பிரிவில் தனது முதலாவது தங்கத்தை தட்டிச் சென்றார்.

2-வது இடத்தை கங்கேரியின் லேஸ்லோ ஷேகும் மூன்றாவது இடத்தை அமெரிக்காவின் லோக்டேவும் கைப்பற்றினர்.

**புதிய சாதனை**

நான்கு நிமிடம் 3.84 விநாடிகளில் போட்டித் தூரத்தை கடந்த பெல்ப்ஸ் 400 மீற்றர் மெட்லே பிரிவில் புதிய ஒலிம்பிக் மற்றும் உலக சாதனை படைத்துள்ளார்.

இதற்கு முன் கடந்த 2000இல் இதே பிரிவில் 4 நிமிடம் 5.25 விநாடிகளில் போட்டித் தூரத்தை கடந்திருந்தார் பெல்ப்ஸ்.

இதுவே இதுவரை உலக சாதனையாக இருந்தது.தற்போது பீஜிங்கில் தனது சாதனையை தானே முறியடித்தார் பெல்ப்ஸ்.

இப்போட்டியை அமெரிக்க அதிபர் புஷ்,



அவரது மனைவி லாரா மற்றும் மகள் பார்பரா ஆகியோர் கண்டு களித்தனர்.

போட்டியின் முடிபில் புஷ், பெல்ப்ஸுக்கு வாழ்த்துத் தெரிவித்தார்.

இது குறித்து பேட்டியளித்த பெல்ப்ஸ் கூறுகையில்,

இங்கு நிலவும் கடும் குளிர் வெற்றிக்குப் போதுமான உறுதியை எனக்குள் தரவில்லை.

ஆனால் போட்டி ஆரம்பமாகியதுடன் அதிபர் தேசியக் கொடியுடன் தனது கட்டை விரலை உயர்த்தி எனக்கு ஆர்வமூட்டினார்.

அது எனக்குள் புது உத்வேகத்தைக் கொடுத்தது. இதனால் தற்போது உலக சாதனையும் படைக்க முடிந்தது என்றார்.




# பெண்கள் பளுதூக்கும் போட்டியில் தாய்லாந்து வீராங்கனை தங்கம் வென்றார்

(பீஜிங்)

பீஜிங் ஒலிம்பிக்கில் நேற்று நடந்த பெண்களுக்கான 53 கி. எடைப்பிரிவில் பளுதூக்கும் போட்டியில் தாய்லாந்து வீராங்கனை பிரபவடே ஜரோன்ரத்தன்னட்டாரக்கோ தங்கம் வென்றார்.

கொரிய வீராங்கனை ஜின்கி யூன் வெள்ளிப் பதக்கமும் பெலரசின் நாஸ்டாசியா நோவிகாவா வெண்கலப்பதக்கமும் வென்றனர்.

**துப்பாக்கி சுடுதலில் செக் குடியரசு வீரர் தங்கம்**

நேற்று நடந்த ஆண்களுக்கான துப்பாக்கி சுடுதல் (டிராப்) போட்டியில் செக் குடியரசின் டேவிட் காஸ்டெலிக்கி தங்கம் வென்றார்.

இவரை அடுத்து இத்தாலி வீரர் ஜியோவானி பெல்லிலோ வெள்ளிப் பதக்கமும் ரஷ்யாவின் அலெக்சி அலிபோவ் வெண்கலப்பதக்கமும் பெற்றனர்.

**சீனா வீராங்கனைக்கு தங்கம்**

நேற்று நடந்த பெண்களுக்கான 10 மீற்றர் துப்பாக்கி சுடுதல் (ஏர் பிஸ்டல்) போட்டியில் சீன வீராங்கனை வென்சுன் ஜியோ தங்கம் வென்றார்.

இவரை அடுத்து ரஷ்யாவின் நடாலியா படிரினா வெள்ளிப் பதக்கமும் ஜியோர்ஜியாவின் நினோ சலுக்வாட்சி வெண்கலப் பதக்கமும் வென்றனர்.

சீனா மூன்றாவது தங்கத்தை வென்று பதக்கப்பட்டியலில் தொடர்ந்து முதலிடத்தில் இருந்து வருகிறது.

**நீச்சலில் நெதர்லாந்து வீராங்கனை தங்கம் வென்றார்.**

பெண்களுக்கான 400 மீற்றர் பிரிஸ்டைல் ரிலே நீச்சல் போட்டியில் நெதர்லாந்து வீராங்கனைகள் தங்கம் வென்றனர்.

இவர்களையடுத்து அமெரிக்க வீராங்கனைகள் வெள்ளிப் பதக்கமும் அவுஸ்திரேலிய வீராங்கனைகள் வெண்கலப் பதக்கமும் வென்றனர்.

**ஆஸி.வீராங்கனை தங்கம்**

நேற்று நடந்த பெண்கள் தனிநபர் 400 மீற்றர் நீச்சல் போட்டியில் அவுஸ்திரேலியாவின் ஸ்டபானி ரைஸ் தங்கம் வென்றார்.

சிம்பாவேயின் கிறிஸ்டி கோவன்டிரி வெள்ளிப் பதக்கமும் அமெரிக்காவின் காடி ஹோப் வெண்கலப் பதக்கமும் வென்றனர்.

**பெண்கள் சைக்கிள் ஓட்டத்தில் இங்கிலாந்து வீராங்கனை வெற்றி**

பெண்களுக்கான சைக்கிள் பந்தயத்தில் (வீதி) இங்கிலாந்தின் நிக்கோலே குக்கி தங்கம் வென்றார்.

சுவீடன் இமா ஜோகன்சன் வெள்ளிப் பதக்கமும் இத்தாலி வீராங்கனை டாட்டியானா குடெர்சோ வெண்கலப் பதக்கமும் வென்றனர்.

**பிரான்ஸ் வீராங்கனைகள் வெண்கலம் வென்றனர்**

பீஜிங் ஒலிம்பிக்கில் நேற்று நடந்த பெண்களுக்கான வில்வித்தைப் போட்டியில் பிரான்ஸ் அணி வீராங்கனைகள் இங்கிலாந்தை வீழ்த்தி வெண்கலப் பதக்கம் வென்றனர்.

**பெண்கள் வில்வித்தை அரையிறுதியில் சீனா,இங்கிலாந்து**

பீஜிங் ஒலிம்பிக்கில் நேற்று நடந்த வில்வித்தை காலிறுதியில் சீனா, இங்கிலாந்து, பிரான்ஸ், கொரிய அணிகள் முறையே இந்தியா, ஜப்பான், போலந்து, இத்தாலி அணிகளை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினர்.

அரையிறுதியில் சீனா இங்கிலாந்தையும் கொரியா பிரான்சையும் எதிர்கொள்கின்றன.

**பெண்கள் இரட்டையர் டைவிங் சீனா தங்கம் வென்றது**

ஒலிம்பிக் போட்டியில் நேற்று நடந்த பெண்களுக்கான இரட்டையர் டைவிங் போட்டியில் சீன வீராங்கனைகள் தங்கம் வென்றனர்.

இவர்களைத் தொடர்ந்து ரஷ்ய வீராங்கனைகள் வெள்ளிப் பதக்கமும் ஜேர்மனிய வீராங்கனைகள் வெண்கலப்பதக்கமும் வென்றனர்.

# மென்டிஸ் புதிய சாதனை படைத்தார்; 3-வது டெஸ்டில் இலங்கை ஆதிக்கம்



(கொழும்பு)

பிரசாத்,மென்டிஸின் துல்லியமான பந்துவீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் இந்திய அணி இரண்டாவது இன்னிங்ஸில் 161 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து ஐந்து விக்கெட்டுக்களை இழந்து தடுமாறுகின்றது.

இரண்டாவது இன்னிங்ஸில் டெண்டுல்கரின் விக்கெட்டை வீழ்த்திய மென்டிஸ் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் ஒன்றில் அறிமுக வீரர் ஒருவர் வீழ்த்திய அதிகூடிய 25 விக்கெட்டுக்கள் என்ற சாதனையைப் படைத்தார்.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 3 டெஸ்ட்,5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றி பெற்று தொடர் சமநிலையிலுள்ள நிலையில் தீர்க்கமான மூன்றாவது டெஸ்ட் கடந்த 8 ஆம் திகதி கொழும்பு பி.சரவணமுத்து மைதானத்தில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 249 ஓட்டங்களை எடுத்தது.

இதில் காம்பீர் 72, ஓட்டங்களையும் கங்குலி 35, சகீர்கான் 32 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் மென்டிஸ் 5 விக்கெட்டுக்களையும் பிரசாத் 3 விக்கெட்டுக்களையும் மற்றும் முரளி 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நேற்று முன்தினம் இரண்டாம் நாள் ஆட்டநேர முடிபில் 6 விக்கெட்டுக்களை இழந்து 251 ஓட்டங்களை எடுத்திருந்தது.

மூன்றாம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு சங்கக்கார,பிரசன்ன ஜெயவர்த்தன ஜோடி சிறப்பாக ஆடி நம்பிக்கையளித்தது.

இந்த ஜோடியைப் பிரிக்க இந்திய அணித் தலைவர் கும்ளே களத்தடுப்பில் பல வியூகங்களை வகுத்தபோதும் முடியவில்லை.

எனினும் இலங்கை அணி 324 ஓட்டங்களை எடுத்தபோது சிறப்பாக ஆடிய குமார் சங்கக்கார 144 ஓட்டங்களை எடுத்து கும்ளேயின் பந்துவீச்சில் விக்கெட் காப்பாளர் பட்டேலிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய அறிமுக வீரர் பிரசாத், பிரசன்ன ஜெயவர்தனவுடன் இணைந்து அதிரடியாக துடுப்பெடுத்தாடினார்.

எனினும் பொறுப்புடன் துடுப்பெடுத்தாடிய பிரசன்ன ஜெயவர்த்தன 49 ஓட்டங்களை எடுத்தபோது சகீர்கானின் பந்துவீச்சில் ஹர்பஜன் சிங்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்து அரைச்சதம் பெறும் வாய்ப்பை நழுவவிட்டார்.

தொடர்ந்து களமிறங்கிய மென்டிஸ் நிதானமாக ஆடினார்.

மறுமுனையில் அதிரடியாக ஆடிய பிரசாத் 36 ஓட்டங்களை எடுத்து ஹர்பஜன் சிங்கின் பந்துவீச்சில் விக்கெட் காப்பாளர் பட்டேலால் ஸ்ரொம்ஸ் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து முரளிதரன் களமிறங்க மறுமுனையில் நிதானமாக ஆடிய மென்டிஸ் 17 ஓட்டங்களுடனும் கும்ளேயின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழக்க இலங்கை அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 396 ஓட்டங்களை எடுத்தது.

இதில் முரளிதரன் ஓட்டமெதனையும் எடுக்காமல் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் சகீர்கான், ஹர்பஜன் சிங் மற்றும் கும்ளே ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் 147 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பின்னிலையிலிருந்த இந்திய அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது.

ஆரம்ப ஜோடிகளான காம்பீர், சேவாக் இணைந்து அதிரடியாக ஆடி சிறப்பான ஆரம்பத்தை வழங்கினர்.

இந்திய அணி 62 ஓட்டங்களை எடுத்தபோது அதிரடியாக ஆடிய சேவாக் 28 பந்துகளில் 34 ஓட்டங்களை எடுத்தபோது பிரசாத்தின் பந்துவீச்சில் சமரவீரவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து ராவிட் களமிறங்கி நிதானமாக ஆட மறுமுனையில் காம்பீர் 26 ஓட்டங்களை எடுத்து பிரசாத்தின் பந்துவீச்சில் நேரடியாக போல்ட் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார்.

அடுத்தடுத்து இரண்டு விக்கெட்டுக்களை இழந்து திணறிய இந்திய அணிக்கு 4-வது விக்கெட்டுக்காக ராவிட்டுடன் இணைந்த கங்குலி நம்பிக்கையளித்தார்.

எனினும் கங்குலியும் 18 ஓட்டங்களை எடுத்தபோது முரளிதரனின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

இந்த ஆட்டமிழப்பை ஏற்க மறுத்த கங்குலி 3-வது நடுவரிடம் மேன்முறையீடு செய்தபோதும் பலனளிக்கவில்லை.

தொடர்ந்து களமிறங்கிய பார்த்திப்பட்டேல் வந்த வேகத்திலேயே ஒரு ஓட்டத்தை மாத்திரமெடுத்து மென்டிஸின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ மு றையில் ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய டெண்டுல்கர் 14 ஓட்டங்களை மாத்திரமெடுத்து மென்டிஸின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

இந்த ஆட்டமிழப்புத் தீர்ப்பை எதிர்த்து டெண்டுல்கர் மூன்றாவது நடுவரிடம் மேன்முறையீடு செய்தபோதும் அது பலனளிக்கவில்லை.

டெண்டுல்கரின் விக்கட்டை கைப்பற்றியதன் மூலம் மென்டிஸின் கனவு நினவாகியதுடன் மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் அறிமுகமான வீரர் அதிகூடிய விக்கெட்டுக்கள் வீழ்த்திய சாதனையயும் மென்டிஸ் படைத்தார்.

தொடர்ந்து காயம் காரணமாக களமிறங்குவாரா என சந்தேகிக்கப்பட்ட வி.வி.எஸ். லக்ஸ்மன், பதில் ஓட்ட வீரருடன் களமிறங்கினார்.

லக்ஸ்மன், தனது வழமையான நிதான ஆட்டத்துடன் துடுப்பெடுத்தாட மறுமுனையில் ராவிட் பொறுப்புடன் துடுப்பெடுத்தாடினார்.

இந்நிலையில் நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டநேர முடிபில் இந்திய அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 161 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதன் மூலம் 14 ஓட்டங்களால் முன்னிலையிலுள்ளது.

இதில் ராவிட் 46 ஓட்டங்களுடனும் லக்ஸ்மன் 17 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்திலுள்ளனர்.

பந்துவீச்சில் பிரசாத் மென்டிஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் முரளிதரன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

நான்காம் நாள் ஆட்டம் இன்றாகும். (5)

# பண்டிதர் மயில்வாகனனார் இறைபதம் அடைந்தார்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த இளைப்பாறிய அதிபர், மூதறிஞர் பண்டிதர் கதிரேசு மயில்வாகனனார் நேற்று முன்தினம் காலமானார்.

இவர் மாத்தளை, கொழும்பு, நீர்கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் ஆசிரியர், அதிபராகக் கடமையாற்றியுள்ளார். தமிழில் பாண்டித்தியம் பெற்ற இவருக்கு முத்தமிழ் வித்தகர், செந்தமிழ்ச் செல்வர், கலாபூஷணம், நாற்கவிராசன், புலவர்மணி போன்ற விருதுகளும் வழங்கப்பட்டுள்ளன.

ஊஞ்சல் பாட்டுகள், பதிகங்கள், பிள்ளைத் தமிழ், திருப்பள்ளி எழுச்சி, கட்டுரை நூல்கள், பாடசாலை மாணவர்களுக்கான நூல்கள் இவரால் எழுதப்பட்டுள்ளன. பண்டிதர் கதிரேசு மயில்வாகனனாரின் இறுதிக் கிரியைகள் வட்டுக்கோட்டையிலுள்ள அவரது இல்லத்தில் இன்று காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (ச-5)

# ஜோர்ஜியா மீது ரஷ்யா தாக்குதல் 2000 க்கும் அதிகமான மக்கள் பலி

(ரஷ்யா)

ரஷ்ய யுத்த விமானங்கள் இரண்டாவது நாளாக நேற்று ஜோர்ஜியா மீது குண்டுமாரி பொழிந்து வருவதால் 2 ஆயிரத்துக்கும் அதிகமான பொதுமக்கள் பலியாகியுள்ளதாகவும் கட்டடங்கள், வீடுகள் என்பன தீப்பற்றி எரிவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து ரஷ்யாவுக்கும் ஜோர்ஜியாவுக்குமிடையே முழு அளவில் யுத்தம் வெடிக்கும் அபாயம் தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ரஷ்யா 6 ஆயிரம் துருப்புக்களைத்தரை மார்க்கமாகவும் 4 ஆயிரம் துருப்புக்களைக் கடல் மார்க்கமாகவும் ஜோர்ஜியாவுக்குள் அனுப்பியுள்ளது. மோதல்களை உடனடியாக முடிபுக்குக் கொண்டு வருமாறு இரு நாடுகளுக்கும் ஐரோப்பிய யூனியன் உட்பட சர்வதேச சமூகம் அவசர கோரிக்கை விடுத்துள்ளது.

ஜோர்ஜியத் தலைநகர் திபிலிஸியில் சர்வதேச விமான நிலையத்திற்கு அண்மையிலுள்ள இராணுவ விமானத் தளம் ஒன்று ரஷ்யப் படையினரால் தாக்கியழிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜோர்ஜியாவிலுள்ள சிவிலியன் இலக்குகள் மற்றும் இராணுவ இலக்குகள் மீது டசின் கணக்கான யுத்த விமானங்கள் தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ரஷ்யக் குண்டு வீச்சு விமானங்கள் மேற்கொண்டு வரும் கடும் தாக்குதலையடுத்து ஜோர்ஜியா யுத்த நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது. ஜோர்ஜியா மீது ரஷ்யா மேற்கொண்டுள்ள தாக்குதல் அபாயகரமான யுத்த விஸ்தரிப்புக்கு வழி வகுக்கும் என்று அமெரிக்க ஜனாதிபதி எச்சரித்துள்ளார்.

ஜோர்ஜியா மீது ரஷ்யா முழு அளவிலான இராணுவ ஆக்கிரமிப்புக்கு வழிகோலியுள்ளதென ஜோர்ஜிய ஜனாதிபதி கூறியுள்ளார். இதேவேளை ஜோர்ஜியாவிலிருந்து பிரிந்துள்ள பிராந்தியமான தென் ஒசிசியாவிலிருந்து ஜோர்ஜியப் படைகளைத் தான் வெளியேற்றியுள்ளதாகவும் தென் ஒசிசியாவுடன் சமாதானத்தை ஏற்றுக் கொள்ளுமாறு நிர்ப்பந்திக்கும் வகையிலேயே படை நடவடிக்கைகளை மேற்கொண்டதாகவும் ரஷ்யா கடந்த சனிக்கிழமை தெரிவித்திருந்தது.

தனது சொந்த மக்களுக்கு எதிராகவே ஜோர்ஜியா குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளது என்று ரஷ்யப் பிரதமர் ஜோர்ஜியா மீது குற்றஞ்சாட்டியுள்ளார்.

மேலும் தெற்கு ஒசிசியாவிலுள்ள கிராமங்களில் இன அழித்தொழிப்பு நடவடிக்கை இடம்பெற்றுள்ளதாகவும் ரஷ்யா, ஜோர்ஜியாவைக் கண்டித்துள்ளது. (ச-5)

## ஒரு மீற்றர் நிலப்பரப்பு கடலுக்குள் மூழ்கி விடும் அபாயம்

எதிர்வரும் 100 வருடங்களில் நாட்டின் ஒரு மீற்றர் நிலப்பரப்பு கடலுக்குள் மூழ்கி விடக் கூடிய சாத்தியம் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடல் பரப்பு மற்றும் பாதுகாக்கப்பட்ட நிலப்பரப்புக்கள் தொடர்பான ஆய்வுக் குழுவினரால் தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

கடல் அரிப்பைத் தடுக்கக் கூடிய பல்வேறு வழிமுறைகள் குறித்து இந்த ஆய்வுக் குழு பரிந்துரைகளைச் செய்துள்ளது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பணிப்புரையின் பேரில் இந்தக் குழு ஆய்வுப் பணிகளை ஆரம்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## வடக்கில்...

பகுதிகளில் இடம்பெற்ற சண்டைகளின் பின்னர் இராணுவத்தினர் மேற்கொண்ட தேடுதலில் 2 விடுதலைப்புலிகளின் சடலங்களும் ஆயுத தளபாடங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தேசிய பாதுகாப்புக்கான ஊடகத் தகவல் மையம் கூறியிருக்கின்றது.

யாழ்ப்பாணம் கிளாலிப் பகுதியில் சனிக்கிழமை அதிகாலை 4 மணியளவில் விடுதலைப்புலிகளின் நிலைகள் மீது இராணுவத்தினர் நடத்திய திடீர் தாக்குதல் ஒன்றில் 15 விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்திருக்கின்றது.

முகமாலைப் பகுதியில் இடம்பெற்ற மற்றொரு தாக்குதல் சம்பவத்தில் விடுதலைப்புலி உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதாகவும் இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். (ச-5)

## 5 மாகாண சபைகளை...

மேல் மாகாண சபை 2009 ஆம் ஆண்டின் மே மாதம் 18 ஆம் திகதியும் மேல் மாகாண சபை 2009 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதியும் ஊவா மாகாண சபை 2009 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 5 ஆம் திகதியும் தென் மாகாண சபை 2009 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 3 ஆம் திகதியும் தமது ஆயுட் காலத்தை நிறைவு செய்கின்றன.

இந்த மாகாண சபைகளில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சி புரிகின்றது. ஜே.வி.பியுடன் இணைந்தே இந்த மாகாண சபைகளில் ஆளும் கட்சி ஆட்சியை நிறுவியிருந்தது.

எனினும் தற்போது ஜே.வி.பி. அரசாங்கத்துக்கான ஆதரவை விலக்கிக் கொண்டுள்ளமையால் அரசாங்கம் எதிர்வரும் வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் தோல்வி காணும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே மாகாண சபைகளைக் கலைக்க அரசாங்கம் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது. (ச-5)

## சீனாவில்...

துப்பாக்கிச் சண்டை நடந்தது.

சிங்சியாங் பகுதியில் உயிகுர் பிரிவைச் சேர்ந்தவர்கள் 80 இலட்சம் பேர் வசிக்கின்றார்கள். இவர்கள் தனி நாடு கோரிப் போராட்டம் நடத்தி வருகின்றார்கள். இவர்கள்தான் குண்டுவெடிப்புக்குக் காரணம் என்று சீனா கருதுகின்றது.

ஏற்கனவே சிங்சியாங் பகுதியில் கடந்த வாரம் பொலிஸ் நிலையத்தில் நடந்த குண்டு வெடிப்பில் 16 பொலிஸார் பலியாகியமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## கிழக்கில்...

சாவடியிலிருந்த படையினரின் உத்தரவை மீறிச் சென்றதன் காரணமாகவே சுடப்பட்டதாகத் தகவல் ஒன்று தெரிவிக்கின்றது.

மற்றொரு தகவலின்படி இவர் சயனைட் உட்கொண்டு மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் உண்மைத் தகவல் இதுவரை வெளியாகவில்லை.

இதேவேளை திருகோணமலை உப்புவெளி பொலிஸ் பிரதேசத்திற்குட்பட்ட நிலாவெளி, பெரியகுளம் பிரதேசத்தில் நேற்று மாலை இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். இவர் இன்னமும் இனங்காணப்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-5)

## ஐ.தே.கட்சி நொண்டிக் குதிரை...

அவர் இவ்வாறு தெரிவித் தார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர் கூறியதாவது,

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தனிப்பட்ட ஒருவருக்காகச் செயற்படாது. மலையக சமூக நலன் கருதியே அன்று தொடக்கம் இன்று வரை செயற்படுகின்றது. மலையக மக்களுக்கு உண்மையானசேவை செய்ய எண்ணுபவர்கள் இ.தொ.காவுடன் இணைந்து கொள்வார்கள்.

சுயநல நோக்கமுள்ளவர்கள் வெளியேறி விடுவார்கள். யார் வேண்டும் என்றாலும் வரலாம்; போகலாம். ஆனால் இ.தொ.கா. தலை நிமிர்ந்து நிற்கும். அதற்கு மக்களின் பேராதரவுள்ளது.

நாம் அரசாங்கத்துடன் இணைந்துள்ளது குறித்து விமர்சனம் செய்யப்படுகின்றது. நாம் சிறுபான்மையினத்தவர்கள். தனியாக ஆட்சி அமைக்க முடியாது. ஜனாதிபதியாகவே பிரதமராகவே பதவி வகிக்க முடியாது.

ஆனால் அரசாங்கம் யார் என்பதைத் தீர்மானிக்க முடியும். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரித்தோம். அக் கட்சி வெற்றி பெறவில்லை. நாம் எவ்வளவுதான் உதவி செய்தாலும் அக் கட்சி வெற்றி பெற முடியாத நிலையில் நாம் அரசாங்கத்துடன் இணைந்துள்ளோம் என்றார். (ச-5)

## தப்பியோடிய படையினரை...

அவர்கள் கைது செய்யப்பட்டுத் தண்டனை வழங்கப்படும். இந் நடவடிக்கையானது படைகளிலிருந்து எதிர்காலத்தில் தப்பியோடுவோரைத் தடுப்பதற்கான வழியாகும்.

கடந்த இரு வருடங்களில் தப்பியோடிய படையினரில் 12 ஆயிரம் பேரை மீண்டும் பணிக்குத் திரும்புமாறு அரசு தொடர்ந்து அறிவித்தல்களை விடுத்து வருகின்றது.

புதிதாகப் படையினரைச் சேர்த்து பயிற்சிகளை வழங்குவதற்குக் கால அவகாசம் தேவை. எனவேதான் பயிற்சி பெற்றபின் தப்பியோடிய படையினரை மீண்டும் சேர்த்துக் கொள்ள முயற்சித்து வருகின்றோம்.

புதிய படையினருக்குப் பயிற்சிகளை வழங்குவதற்கு 16 வாரங்கள் தேவை. அநுராதபுரம், பொலனறுவை, கண்டி, குருநாகல் ஆகிய பகுதிகளிலேயே அதிகளவிலான தப்பியோடிய படையினர் ஒளிந்திருக்கின்றனர்.

எமது கோரிக்கைகளை ஏற்றுக் கடந்த மாதம் ஆயிரத்து 700 படையினர் பணிக்குத் திரும்பியுள்ளார் என்றார் அவர். (ச-5)

## தமிழ் மக்கள் மீதான அடக்கு...

கொழும்பு ஆங்கில வாரப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கியுள்ள விசேட செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் கூறியுள்ளதாவது,

பிரச்சினைக்கான உண்மையான காரணியைக் கண்டறிந்து அதற்கே தீர்வினைக் காண முற்பட வேண்டும். தமிழ் மக்கள் மீதான அடக்கு முறையே இனப்பிரச்சினைக்கான உண்மையான காரணி.

ஆனால் இந்தக் காரணியைக் கண்டறிவதில் 1956 முதல் வந்த தெற்கின் தலைமைகள் மீண்டும் மீண்டும் தோல்வியையே சந்தித்து வந்துள்ளன.

13-வது திருத்தச் சட்ட மூலத்தையும் விட மேலதிகமாக வழங்குவது இனப்பிரச்சினைக்கான பிரதான தீர்வாக அமைய முடியுமா என்னும் கேள்விக்கு இல்லை எனப் பதிலளித்துள்ள அவர்,

13-வது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதே தீர்வுக்கான முதற்கட்ட முன்னெடுப்பாகக் கொள்ள முடியும் எனத் தெரிவித்துள்ளார்.

இதனைச் செய்வதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியம் எனவும் இதுவே பயன்தரக் கூடிய நடவடிக்கை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் நாட்டைப் பிரிக்காது எவ்வாறு அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்க முடியும் என மக்களை அறிவூட்ட வேண்டும்எனக் குறிப்பிட்டுள்ள அமைச்சர் ராஜித சேனாரத்ன அதன் பின்னர் அதிகாரப் பரவலாக்கலை நோக்கி முன்னேற முடியும் என்வும் தெரிவித்துள்ளார்.

சமஷ்டி என்னும் எண்ணக் கருவினைத் தமிழ் அரசியல் தலைமைகளே முதலில் முன்மொழிந்ததன் காரணமாக அன்றிலிருந்து சமஷ்டியை பிரிவினைவாதத்திற்குச் சமனான ஒன்றாகச் சிங்களவர்கள் கருதுகின்றனர்.

சமஷ்டி எண்ணக் கருவை முன்வைத்தவர்கள் பின்னர் தனிநாடு அல்லது தமிழீழக் கோரிக்கையை முன்வைத்தனர். இதன் காரணமாக சமஷ்டி எண்ணக் கரு ஏற்றுக் கொள்ளப்பட்டால் சில வேளை தமிழ் அரசியல் கட்சிகள் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைக்கக் கூடும் எனும் அச்சம் எழுந்தது.

சமஷ்டி என்பது பல ஐரோப்பிய நாடுகளிலும் அயல் நாடான இந்தியாவிலும் ஒரு மோசமான வார்த்தையாகக் கருதப்படவில்லை. இலங்கையின் தெற்கில் இது தொடர்பாகவுள்ள தவறான புரிந்துணர்வை முதலில் தெளிவுபடுத்த வேண்டும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

13-வது திருத்தச் சட்டமூலத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு தாம் கோருவதானது அரசியல் அமைப்பின் ஒருபகுதியே. அக் கோரிக்கை சட்ட ரீதியானதும் கூட. அதனை எதிர்ப்பவர்கள் அரசியல் அமைப்புக் குறித்த சரியான அறிவற்றவர்களே எனவும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி, அமைச்சர்கள், நீதிபதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசாங்க ஊழியர்கள் அனைவரும் அரசியல் அமைப்பை ஏற்றுக் கொண்டே பதவிப் பிரமாணம் செய்து கொண்டதாகவும் அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார். (ச-5)

## பாதுகாப்பு உத்தரவாதத்தை...

கொண்ட ஐந்து அமைச்சர்களும் தனது நிலைப்பாட்டினை விளங்கிக் கொண்டுள்ளதாக வும் அரசாங்கத்திடமிருந்து எழுத்து மூல உறுதிமொழியைப் பெற்றுத் தருவதாக அவர்கள் தன்னிடம் கூறியதாகவும் மன்னார் மறைமாவட்ட ஆயர் தெரிவித்துள்ளார்.

உணவுப் பிரச்சினை, பாதுகாப்பு உத்தரவாதம் இன்மை, கண்ணிவெடி அபாயம் ஆகியவையே இம்முறை மடு மாதா வருடாந்த உற்சவத்தை வழமைபோன்று பாரியளவில் நடாத்த முடியாமைக்குக் காரணமாகவுள்ளது.

மடு மாதா ஆலய வளாகப் பகுதியில் இடம்பெற்ற மோதல்கள் காரணமாக அங்குள்ள கிணறுகள் அசுத்தமடைந்துள்ளன. வழிபாட்டில் ஈடுபட வரும் மக்களுக்குத் தேவையான சகல வசதிகளையும் ஏற்பாடு செய்யாமல் மக்களை அங்கு வரவழைக்க முடியாது.

அத்துடன் பாதுகாப்புப் பிரச்சினையையும் தாம் எதிர்கொள்வ தாகக் குறிப்பிட்டுள்ள அவர், ஆலய வளாகத்தைச் சமாதான வலயமாகப் பிரகடனப்படுத்துமாறு அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் வாய் மூலமாகத் தன்னிடம் வாக்குறுதியளித் துள்ளதாகக் குறிப்பிட்டுள்ள ஆயர், அரசாங்கம் ஆலய வளாகத்தைச் சமாதான வலயமாகப் பிரகடனப்படுத்தினால் தாமும் அதன்படி நடக்கத் தயாராக இருப்பதாகப் புலிகள் தன்னிடம் குறிப்பிட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

மறைந்த தமிழ்ச்செல்வன் தன்னிடம் மாத்திரமன்றி ஏனைய குரு முதல்வர் முன்னிலையிலும் இந்த வாக்குறுதியை வழங்கியதாகக் குறிப்பிட்டுள்ள அவர்,

புலிகளின் தற்போதைய அரசியல்துறைப் பொறுப்பாளர் நடேசன், பி.பி.சி. செய்திச் சேவைக்கு வழங்கிய செவ்வியிலும் சமாதான வலயமாகப் பிரகடனப்படுத்தப் புலிகள் தயார் எனக் குறிப்பிட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மூன்று மில்லியன் ரூபாய் செலவில் படையினர் மடு ஆலயத்தைப் புனரமைப்புச் செய்தமை குறித்துத் தனது நன்றிகளைத் தெரிவித்துள்ள அவர், இதனால் தான் பெரிதும் மகிழ்ச்சியடைவதாகவும் குறிப்பிட்டுள்ளார். (ச-5)


வந்துவிட்டது வெற்றித்தேர்வு 25

பல ஆயிரக்கணக்கான யாழ் மாணவர்களைச் சந்தித்த

திருமலை.எஸ்.கணேசலிங்கம் அவர்களின்

2008. தரம்:5 இறுதி வெற்றித்தேர்வு - 25

திங்கள் பாடசாலைகளுக்கு.
புதன் புத்தகசாலைகளுக்கு.

தரம் : 5 மாவட்ட இறுதிப் பரீட்சை.25

செவ்வாய் 12.08.08 8,10,12,2,4 மணிக்கு.

நல்லூர் சயன்ஸ் அக்கடமி

பெறுபேறு வியாழன் 12 மணிக்கு வெளியாகும்.

கருத்தரங்கில் கலந்துகொள்ளாத மாணவர்களுக்கு கையேடு
பூபாலசிங்கம் புத்தகசாலையில். இன்று.


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.08.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.